DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1554 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 16, 2026

# றொறன்ரோ பல்கலைக் கழக "தமிழ் இருக்கை" அமைவதற்கு நிதி வழங்கிய தமிழக முதலமைச்சருக்கு சென்னை விழாவில் நேரடியாகப் பாராட்டுத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன்!

கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் 12ம் திகதி திங்கட்கிழமையும் சென்னையில் தமிழ்நாடு அரசு நடத்திய பிரமாண்டமான "அயலகத் தமிழர் விழா" நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் வகையில் கனடாவிலிருந்து எமது பிக்கரிங் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.

மேற்படி இரண்டு நாட்களும் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி மற்றும் அமைச்சர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

அந்த மேடையில் எமது பிக்கரிங் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்கள் ஆற்றிய உரையானது பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாகவும் சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றதுமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 22ம் பக்கம்)



## UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2026

உலகெங்கும் பேசப்பெறும் கனடா உதயன் சர்வதேச விருது விழா 2026
06-06-2026 அன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ளது. விருது விழா தொடர்பான மேலதிக விபரங்களுக்கு
uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சல் மூலமாகவோ அன்றி
416 732 1608 அல்லது 647 854 8384 ஆகிய தொலைபேசி இலக்கங்களிலோ தொடர்பு கொள்ளவும்.

# உலகெங்கும் பேசப்பெறும் "ராப்" பாடகர் வாகீசன் இராசையா, அவரது சகாக்களான அட்விக் மற்றும் திசோன் கலந்துகொள்ளும் இரண்டு விழாக்கள் மொன்றியால் மாநகரில்



உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் புகழுடன் பேசப்பெறும் "ராப்" பாடகர் வாகீசன் இராசையா, அவரது மேடைச் சகாக்களான அட்விக் உதயகுமார் மற்றும் திசோன் விஜயமோகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கும் இரண்டு விழாக்கள் மொன்றியால் மாநகரில் நடைபெறுகின்றன.

மொன்றியால் மாநகரில் 18-01-2026 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று பல மொன்றியால் அமைப்புக்கள் இணைந்து நடத்தும் தமிழ் மரபுத் திங்கள் விழாவிலும் 23-01-2026 வெள்ளிக்கிழமையன்று மொன்றியால் **EYE TAMIL** ஊடக நிறுவனத்தின் சார்பில் நடைபெறும் **EYE TAMIL NIGHT** விழாவிலும் இந்த மூன்று அற்புதக் கலைஞர்களும் மேடையில் தோன்றி அனைவரையும் உற்சாகத்தில் ஆழ்த்தவுள்ளார்கள். (தொடச்சரி 3ம் பக்கம்)

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
We work with your insurance company
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office)
(76278)
• Water and flood services • Mold remediation • Trauma
• Sewage clean up • Fire & smoke • 24/7/365 days
LISENSED INSURED CERTIFIED

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law Family Law Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca ERAA PLAZA Unit #231




# இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## Happy Thai Pongal & Tamil Heritage Month

எமது வாக்காளப் பெருமக்கள், நண்பர்கள் மற்றும்
அனைத்து தமிழ்க் கனேடியர்களுக்கும்,
இனிய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம் சார்பான வாழ்த்துக்கள்!

ONTARIO

**Aris Babikian**
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
**Constituency Office:**
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org




Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# வடக்கில், தமிழ்த் தேசிய அரசியலில் நேர்மையுடனும் நிதானத்துடனும் பயணிக்கும் தலைவர்கள் இல்லாத வரையும், அநுர போன்ற தென்னிலங்கைத் தலைவர்களை வடக்கின் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பதை தவிர்க்க முடியாது!

இலங்கையில் தமிழ்த் தலைவர்களின் மேலாதிக்கத்தில் வடக்கு மக்கள் அரசியலோடு பயணிக்கத் தொடங்கி தற்போது சுமார் 75 ஆண்டுகள் கழிந்தோடி விட்டன. இதுவரையிலும் வடக்கின் தமிழர்களின் வாக்குகளைச் சுமந்த வண்ணம் பாராளுமன்ற அரசியலை நடத்தி வந்த நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல்வாதிகளை கோசங்களை எழுப்பிய வண்ணமும். தமக்கு வாக்களித்தவர்களுக்கு கூட பொய்யான வாக்குறுதிகளை வழங்கிவிட்டு கொழும்பு வாசிகளாக மாறி தங்கள் குடும்ப நலன்களை மாத்திரம் கவனித்துக் கொண்டு காலத்தைக் கடத்தியவர்களாகவும் இருந்துள்ளார்.

மேலும் எமது கடந்த காலத் தலைவர்களில் எமது மக்கள் பாராளுமன்றத்திற்கு வாக்களித்து அனுப்பியவர்களி தொண்ணுாறு சதவீதமானவர்கள் சட்டத்தரணிகளாகவே அரசியலுக்குள் நுழைந்தவர்கள். அவர்கள் நீதி மன்றங்களில் பொய் பேசுகின்றவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களை பாராளுமன்றத்திற்கும் அனுப்பியவர்கள் எமது தமிழ் மக்கள்.

மொத்தத்தில் எமது தமிழ் மக்கள் இன்னும் அரசியல். சுமூக. பொருளாதாரத் தளங்களில் முன்னேற்றங்களைக் அடையாமல் நடுத்தர மற்றும் வறிய குடும்பச் சூழலோடுதான் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். மறுபக்கத்தில் எமது தமிழ்ச் சமூகத்தில் அரசியல்வாதிகள் பலரும் உயர் அரசாங்க அதிகாரிகளும் வர்த்தகர்களுமே வசதிகளோடு வாழும் மக்களாகத் தென்படுகின்றார்கள். மற்றவர்கள் வறுமை என்னும் கொடிய மிருகம் துரத்திக் கொண்டே இருக்கின்றது. சாதாரண ஆசிரியர்கள் மற்றும் நடுத்தர அரச பதவிகளை வகிப்பவர்கள் கூட வாழ்க்கையை நடத்துவதில் தினந்தோறும் சிரமங்களை சந்தித்த வண்ணமே வாழ்க்கையை நடத்துகின்றார்கள்.

இவற்றை நாம் ஏன் இங்கு குறிப்பிட்டுச் சொல்லுகின்றோம் என்றால், அதற்கு காரணம் உள்ளது. அதாவது. அரசியலும் அரசியல் தலைவர்களும் அந்த தேசத்தின் அல்லது மாகாணத்தின் மக்களுக்காக அரசியல் தாங்கள் சார்ந்திருக்கும் பதவிகளைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் எமது நாட்டில் அப்படியல்ல நிலைமை.

தமிழ் அரசியல்வாதிகளும் தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் ஏன்.

மலையக அரசியல் தலைவர்களும் தங்கள் பொருளாதார வளத்தையும் குடும்பத்தின் மேன்மையையும் உயர்த்துவதிலேதான் கவனமாக இருந்துள்ளார்கள். இது உண்மை என்று நிரூபிக்க பல அரசியல்வாதிகளை உதாரணமாக எடுக்கலாம். மலையத்தில் தொண்டமானையும் தென்னிலங்கையில் மகிந்த ராஜபக்ச சகோதரர்களின் குடும்ப பரம்பரையையும் வடக்கில் மாவை சேனாதிராஜா போன்றவர்களையும் உதாரணமாக எடுக்கலாம்.

ஆரம்ப காலத்தில் தமிழரசுக் கட்சி முழு நேர ஊழியராக சம்பளம் பெற்று தனது அரசியலையும் வாழ்க்கையையும் நடத்திய மாவை சேனாதிராஜா அவர்கள் இறக்கும் போது ஒரு செல்வந்தராகவே இவ்வுலக வாழ்க்கையை விட்ட நீங்கிச் சென்றார். அவர் எவ்வாறு ஒரு செல்வந்தர் ஆனார் என்பதை விசாரிக்க தமிழ் மக்களே ஒரு விசாரணைக் குழவை அமைக்க வேண்டும். இந்த சந்தேகம் பல தமிழ் அரசியவாதிகள் மீதும் எம் மககளுக்கு இருப்பது தவிர்க்க முடியாததாக உள்ளது.

மாவை சேனாதிராஜா போன்ற அரசியல்வாதிகள் தமிழ்நாட்டின் கருணாநிதி குடும்ப அரசியலை கவனித்து விட்டு அதுபோன்ற அரசியல் பரம்பரை ஒன்றை நிறுவிட முயன்றார்கள். மாவை சேனாதிராஜா அவர்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சராக வரவேண்டும் என்ற "வேட்கை" கடைசி வரையிலும் இருந்தது. அதனாலேயே தனது புதல்வரை அரசியலுக்குள் கொண்டுவர முயற்சி செய்தார். இவ்வாறே, எமது மாகாண அரசியலும் கீழ் நோக்கிச் சென்றது.

மாகாண நிர்வாகத்தின் மூலம் மக்களுக்கு சேவை செய்வோம் என்று கூறி முதலமைச்சர் பதவியிலும் அமைச்சர் பதவியிலும் அமர்ந்தவர்கள் அவ்வாறு மக்கள் பணி செய்யாமல் அதிகார துஸ்பிரயோகங்களிலும் ஊழல்களிலும் கவனம் செலுத்தினார்கள். சில வடக்கு மாகாண அமைச்சர்கள் கூட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகினார்கள். காற்றாலை ஒப்பந்தங்கள் மற்றும் சீனித் தொழிற்சாலை ஒப்பந்தங்களின் போது சில அமைச்சர்கள் பேரம் பேசி நின்றார்கள். மக்கள் பணிகளை அவர்கள் மறந்து போய் தங்களை "வளர்த்துக் கொள்ள தங்கள் பதவிக் காலங்களை பயன்படுத்தினார்கள்.

இவ்வாறான காரணங்களினால் தான் தற்போது எமது வடக்குத் தமிழர்கள் அநுர குமார போன்ற ஜனாதிபதியையும் அவரது அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் யாழ்ப்பணைத்தில் வரவேற்கின்றார்கள். எமது தாய்மார்கள் அவர்களை வணங்குகின்றார்கள்.. காரணம் அவர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வான் வழியாக வருவதிலலை. அங்கிருந்து சாதாரணமான வாகங்களில் வீதிகளின் ஊடாக பயணிக்கின்றார்கள். மக்களை நேரடியாகச் சந்திக்கின்றார்கள்.

(அவசியம் கருதி. இவ்வாரக் கதிரோட்டம் அடுத்த வாரமும் தொடரும்)

# கனடாவில் இயங்கும் "கல்முனை பிராந்திய இணையம்" அமைப்பினர் அம்பாறை மாவட்ட கோமாரி கிராமத்தில் முன்னெடுத்த மனித நேயப் பணி!



கிழக்கு மாகாண, அம்பாறை மாவட்டம் பொத்துவில் கோமாரி பகுதியை சேர்ந்த கிராம அவிருத்தி சங்கத்தினர் கனடாவில் இயங்கும் "கல்முனை பிராந்திய சேவை அமைப்பினருக்கு" விடுத்த வேண்டுகோளின் பேரில் கோமாரி கழுகொல்ல கிராமத்தில் வாழ்கின்ற வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் வசதிகள் அற்ற முதியோர்களுக்கான (பெண்கள்) தைப்பொங்கலை முன்னிட்டு சிறப்பு பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



கல்முனை பிராந்திய இணையம் கனடா அமைப்பினர் கனடாவில் ஒன்று கூடி அவர்கள் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அமைப்பின் பிரதான இணைப்பாளர் விஜயரெட்னம் நொனிசப்பு, மற்றும் அமைப்பின் தலைவரான விசு கணபதிப்பிள்ளை அவர்கள். செயலாளர் பத்மநாதன் வேலுப்பிள்ளை, பொருளாளர் கோபி கிருஷ்ணன் குமார சூரியன், ஆகியோரின் சிறந்த ஆலோசனைக்கு அமைய கோமாரி கிராமத்திலே உள்ள சில முதிய பெண்களுக்கு தைப்பொங்கல் தினத்தினை அவர்களும் எல்லா மக்களும் போன்று கொண்டாட வேண்டும் என்ற நோக்கம் கருதி அவர்களுக்கான புதிய ஆடைகளும், பொங்கல் செய்வதற்கான சகல உபகரணங்களும் உள்ளிட்டு பொருட்கள் உட்பட சில உலர் உணவு பொருட்களும் வழங்கப்பட்டன.

14-01-2026 திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் தாயகத்தில் இப்பணியை சிறப்பாக முன்னெடுப்பதற்கு முன் நின்று செய்யப்பட்ட திரு. என். சௌவிய தாசன் மற்றும் ஓய்வு பெற்ற உதவி கல்வி பணிப்பாளரும், ஊடகவியலாளருமான விபுலமணி வீ.ரி. சகாதேவ ராஜா மற்றும் சிறுவர் விரிவு உதவி கல்வி பணிப்பாளர் சார்ந்த குமார் ஆகியோர் கலந்து கொண்டு முதியோர்களுக்கான இந்த பொருட்களை வழங்கி வைத்தனர்.





"கல்முனை பிராந்திய இணையம்" கனடா அமைப்பினர் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலமையினால் பாதிக்கப்பட்ட மலையக பகுதி மக்களுக்கும் பல லட்சம் பெறுமதியான நிவாரண உதவிகளை வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்பெறும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

***- UTHAYAN LJI Journalist Ganesh -***

## HELP WANTED

**Workers needed for renovation company. Must have experience in one of the following:**

- **Drywall Installation**
- **Hardwood Installation**
- **Kitchen Reno**
- **Painting**
- **Bathroom Reno**

**Call - Siva 416-893-3216**

(முன்பக்கத் தொடர்ச்சி)

## உலகெங்கும் பேசப்பெறும் "ராப்" பாடகர் வாகீசன் இராசையா, அவரது சகாக்களான அட்விக் மற்றும் திசோன் கலந்துகொள்ளும் இரண்டு விழாக்கள் மொன்றியால் மாநகரில்....

அத்துடன் 24-01-2026 சனிக்கிழமை அன்று டுறம் பிராந்தியத்தில் உள்ள **DURHAM CONVENTION CENTRE** விழா மண்டபத்தில் மூன்றாவது விழா நடைபெறுகின்றது என்ற தகவலும் எமக்குக் கிடைத்துள்ளது.

மொன்றியால் **EYE TAMIL NIGHT** விழா தொடர்பான விபரங்களுக்கு 514 584 2699 என்னும் இலக்கத்தையும்வு தமிழ் மரபுத்திங்கள் விழா தொடர்பான விபரங்களுக்கு 514 360 8511 என்னும் இலக்கத்தையும்

மேலதிக விபரங்களுக்கு இங்கு காணப்பெறும் விளம்பர அறிவித்தல்களைப் பார்க்கவும்.

உலக செய்திகள்
World News

# பொங்கல் ஒரு உலகளாவிய விழாவாக மாறிவிட்டது — பிரதமர் மோடி பேச்சு



டில்லியில் மத்திய அமைச்சர் எல். முருகன் இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

தமிழகத்தின் மிகுந்த உற்சாகத்துடன், நீண்ட நாட்கள் தொடர்ந்து கொண்டாடப்படும் பண்டிகையாக பொங்கல் பண்டிகை திகழ்கிறது. அனைத்து வீடுகளிலும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும், உறவினர்களும் ஒன்றிணைந்து, தமிழர்களின் பாரம்பரிய மரபுகளை நினைவுபடுத்தும் வகையில் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில், மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் மீன்வளத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன், ஆண்டுதோறும் டில்லியில் உள்ள தனது இல்லத்தில், தமிழர்களின் பாரம்பரியம் மாறாமல் பொங்கல் விழாவைக் கொண்டாடி வருகிறார். "ஒரே பாரதம் - உன்னத பாரதம்" என்ற நோக்கத்தின் அடிப்படையில் நடைபெறும் இந்த விழாவில், முக்கியத் தலைவர்கள் கலந்துகொள்வது வழக்கம். அந்த வகையில், எல். முருகன் இல்லத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்த விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த பாஜக தலைவர்களும் கலந்து கொண்டனர். நடிகர்கள் சிவகார்த்திகேயன், ரவி மோகன் உள்ளிட்ட பராசக்தி படக்குழுவினரும் இதில் பங்கேற்றனர். இந்தப் பொங்கல் விழாவில் பிரதமர் மோடி, "இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்" என்று தமிழில் கூறி உரையைத் தொடங்கினார்.

மோடி பேசியதாவது: "தமிழர் வாழ்வில் விவசாயிகளின் மகத்துவத்தையும், வேளாண்மையைப் போற்றுவதையும் வெளிப்படுத்தும் சிறப்பான பண்டிகை பொங்கல். வேளாண்மையை போற்றும் பண்டிகைதான் பொங்கல். பொங்கல் பண்டிகையை சர்வதேச திருவிழாவாகக் கொண்டாடுவது அளவில்லாத மகிழ்ச்சியை அளிக்கிறது. தமிழ் மக்களுடன் பொங்கலைக் கொண்டாடுவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. தமிழ் கலாசாரத்தில் உழவர்களே வாழ்வின் ஆதாரம் என்று போற்றப்படுகிறார்கள். தமிழர் வாழ்வில் விவசாயிகளின் மகத்துவத்தையும், வேளாண்மையைப் போற்றுவதையும் பிரதிபலிக்கும் பண்டிகைதான் பொங்கல். பொங்கல் இன்று ஒரு உலகளாவிய விழாவாக மாறியுள்ளது. தமிழர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆழமான தொடர்பை வெளிப்படுத்தும் திருக்குறள் இருந்துள்ளது" என்று அவர் பேசினார்.

# "தி ராஜா சாப்" படம் 4 நாளில் ரூ.200 கோடி வசூல்



பான் இந்தியா நட்சத்திரம் பிரபாஸ் நடிப்பில் கடந்த 9ந் தேதி வெளியான படம் "தி ராஜாசாப்". பீப்பிள் மீடியா பேக்டரி தயாரிப்பில் மாருதி இயக்கிய இந்தப் படத்தில் மாளவிகா மோகனன், நிதி அகர்வால் மற்றும் ரித்தி குமார் ஆகியோர் கதாநாயகிகளாகவும், சஞ்சய் தத், போமன் இரானி, ஜரினா வஹாப் மற்றும் சமுத்திரக்கனி ஆகியோர் முக்கிய வேடத்திலும் நடித்துள்ளனர். தமன் இசையமைத்துள்ளார்.


இந்த படத்தின் பிரீ ரிலீஸ் நிகழ்ச்சியில் பேசிய இயக்குனர், "ராஜா சாப்" படம் ரசிகர்களின் எதிர்பார்ப்புகளில் 1சதவீதம் பூர்த்தி செய்யத் தவறினாலும் கேள்வி கேட்கலாம் என்று சவால் விட்டிருந்தார். பிரமாண்ட பொருட்செலவில் எடுக்கப்பட்ட இப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் பாக்ஸ் ஆபிஸில் பல கோடிகளைத் திரட்டி வருகிறது. இந்த நிலையில், இப்படத்தின் வசூல் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படம் 4 நாட்களில் ரூ.200 கோடி வசூல் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து விடுமுறை நாட்கள் என்பதால் படத்தின் வசூல் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# "விஜய்யின் ஜன நாயகன் விரைவில் வெளியாகும்" — சிவகார்த்திகேயன்



டில்லியில் மத்திய அமைச்சர் எல்.முருகனின் இல்லத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் "பராசக்தி" படக்குழு கலந்துகொண்டது. இதனைத்தொடர்ந்து வெளியே வந்த சிவகார்த்திகேயனிடம் செய்தியாளர்கள் சில கேள்விகளை எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர், "அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகள். உலகம் முழுவதும் பரவிவாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள். அனைவரிடமும் நேர்மறை எண்ணங்கள் பரவட்டும். பராசக்தி படத்தில் எந்த சர்ச்சையும் இல்லை. மக்கள் படத்தை சரியான வழியில் புரிந்துகொண்டுள்ளனர். நாங்கள் என்ன நோக்கத்துடன் படத்தை எடுத்தோமோ அது மக்களைச் சென்றடைகிறது. அவர்கள் படத்தை முழுமையாகப் பார்த்தால் புரிந்துகொள்வார்கள். எனக்கு எந்த பிரச்சார நோக்கமும் இல்லை. அதில் விருப்பமும் இல்லை. விஜய்யின் அரசியல் பயணத்திற்கு நான் தனிப்பட்ட முறையிலும், சமூக வலைதளங்களிலும் வாழ்த்து தெரிவித்தேன். அவருடைய ஜனநாயகன் விரைவில் வெளியாகும்" என தெரிவித்தார்.

# "தனுஷ் 54" படத்தின் முக்கிய அறிவிப்பை வெளியிட்ட படக்குழு




போர் தொழில், பட இயக்குனர் இயக்குனர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் தனது 54வது படத்தில் தனுஷ் நடித்து முடித்துள்ளார். இப்படத்திற்கு தற்காலிகமாக "டி54" என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. வேல்ஸ் பிலிம்ஸ் இண்டர்நேஷனல்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக மமிதா பைஜு நடித்துள்ளார்.

மேலும் இப்படத்தில் கருணாஸ், கே.எஸ். ரவிக்குமார், பிருத்வி பாண்டியராஜன், குஷ்மிதா மற்றும் நிதின் சத்யா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படம் பிரமாண்டமான பொருட்செலவில், பரபரப்பான கதைக்களத்தில், எமோஷனல் திரில்லராக உருவாகியுள்ளது. இப்படத்தை வருகிற பிப்ரவரி மாதம் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளதாக படத்தின் தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் சமீபத்தில் தெரிவித்திருந்தார். இந்நிலையில், "டி54" படத்தின் முக்கிய அப்டேட் பொங்கல் பண்டிகையையொட்டி காலை 10.50 மணிக்கு வெளியாகும் என்று பட தயாரிப்பு நிறுவனம் பதாகை வெளியிட்டு அறிவித்துள்ளது.

# துருவ் விக்ரம் நடித்த பைசன் படத்துக்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம்




சர்வதேச திரைப்பட விமர்சன தளம் லெட்டர்பாக்ஸ்டு டாப் 10 ஆக்சன்/அட்வென்சர் திரைப்பட தரவரிசைப் பட்டியலில் ஒரே தமிழ் படமாக "பைசன் காளமாடன்" இடம்பெற்றுள்ளது. 7வது இடத்தை லோகா, 8வது இடத்தை துரந்தர் ஆகிய இந்திய படங்கள் இடம்பெற்றுள்ளன. மாரி செல்வராஜ் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடிப்பில் வெளியான படம் "பைசன்". இப்படத்தில் துருவ் விக்ரமுக்கு ஜோடியாக அனுபமா பரமேஸ்வரன் நடித்திருந்தார். கபடி வீரரின் வாழ்க்கையை தத்துரூபமாக வெளிப்படுத்திய "பைசன்" படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வசூலையும் குவித்தது.

இப்படத்தை பார்த்து பிரபலங்கள் பலரும் படக்குழுவினரை பாராட்டினர். இந்நிலையில், சர்வதேச திரைப்பட விமர்சன தளமான லெட்டர்பாக்ஸ்டு தளத்தில் இந்தாண்டிற்கான டாப் 10 ஆக்சன்/அட்வென்சர் திரைப்பட தரவரிசைப் பட்டியலில் 5-வது இடத்தில் "பைசன் காளமாடன்" இடம்பெற்றுள்ளது.

# தமிழ் சமூகத்திற்கு சிங்கப்பூர் பிரதமர் பொங்கல் வாழ்த்து



தமிழகத்தில் பொங்கல் பண்டிகை தைத்திருநாளான கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், பாரம்பரிய முறையில் புது மண்பானையில் பொங்கலிட்டு மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் பொங்கல் பண்டிகை கொண்டாடப் படும். தமிழகத்தில் போகி பண்டிகை, தை பொங்கல், மாட்டு பொங்கல் மற்றும் காணும் பொங்கல் என பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் விமரிசையாக கொண்டாடப்படும். இதன்படி, போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்நிலையில், பொங்கல் பண்டிகையை கொண்டாடும் தமிழ் சமூகத்திற்கு சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங் வாழ்த்துகளை தெரிவித்து உள்ளார். இதுபற்றி அவர் வெளியிட்டு உள்ள சமூக ஊடக பதிவில், பொங்கலோ பொங்கல்! நம்முடைய தமிழ் சமூகம் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையானது, குடும்பத்தினருடன் ஒன்று சேர்ந்து, நன்றியை செலுத்தவும், நம்முடைய பாரம்பரிய வேர்களை மதிக்கவும், வரவிருக்கும் நம்பிக்கைக்குரிய ஆண்டை வரவேற்கவும் ஏற்ற ஒரு பண்டிகைக்கான காலம். இந்த தருணத்தில், அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். லிட்டில் இந்தியா அல்லது இந்திய பாரம் பரிய மையத்தில் பொங்கல் பண்டிகை உணர்வை அனுபவிப்பதற் காக, சிறிது நேரம் ஒதுக்குங்கள் என்று அவர் தெரிவித்து உள்ளார்.

# தாய்லாந்து: ரெயில் மீது கிரேன் சரிந்ததில் 22 பேர் மரணம்




தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரில் இருந்து வடகிழக்கே உபோன் ரத்சதானி மாகாணம் நோக்கி காலை ரெயில் ஒன்று புறப்பட்டு சென்றது. அந்த ரெயில், பாங்காக்கில் இருந்து 230 கி.மீ. தொலைவில் நகோன் ரச்சசீமா மாகாணத்தின் சிகியோ மாவட்டத்தில் சென்று கொண்டிருந்தது. அப்போது, ரெயில் செல்லும் பாதையில் அதிவிரைவு ரெயில் திட்டம் சார்ந்த பணிகள் நடந்து வந்துள்ளன. அதில் பயன்படுத்தப்பட்ட கிரேன் ஒன்று திடீரென சரிந்து ரெயிலில் ஒரு பெட்டியின் மீது விழுந்துள்ளது. இதில் ரெயில் தடம் புரண்டது. இந்த விபத்தில் சிக்கி பயணிகள் 22 பேர் உயிரிழந்தனர். 30 பேர் படுகாயமடைந்தனர். அவர்களை மீட்கும் பணிகள் நடந்து வருகின்றன.

# ஊர்காவற்துறை பிரதேசசபைப் பகுதியில் பொலுத்தீன் பாவனை தொடர்ந்தால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் தவிசாளர் அன்னராசா!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



ஊர்காவற்துறை பிரதேச சபை ஆளுகைக்குள் பொலுத்தீன் லஞ்சீற் பாவனை அவதானிக்கப்படும் பட்சத்தில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், 1.1.2025 தொடக்கம் இந்த விடயம் அமுலுக்கு வந்ததாக ஊர்காவற்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.அன்னராசா எச்சரித்துள்ளார்.

ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் ஊர்காவற்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோரது இணைந்த ஊடக சந்திப்பு 12ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் பிரதேச சபையில் நடைபெற்றது. இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பொலுத்தீன் பாவனை காரணமாக பல்வேறுபட்ட நோய்கள் ஏற்பட்டு தினமும் பலர் உயிரிழக்கின்றனர். பொலுத்தீன் பாவனை மூலம் எமது சுற்றுச்சூழல் மாசடைகிறது.

பொலுத்தீன் பைகள் பாவனைக்கு பதிலாக துணியினாலான பைகளை பயன்படுத்துவதன்மூலம் அதனை கட்டுப்படுத்த முடியும். உணவகங்களில் லஞ்சீற்றினை தவிர்த்து வாழையிலை, சுடுநீரில் சுத்தம் செய்த பீங்கான்கள் போன்றவற்றை பயன்படுத்தி உணவுகளை பரிமாற முடியும்.

மேலும், ஊர்காவற்துறை பகுதியில் வசித்தவர்கள் தற்போது ஊர்காவற்துறையை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் புலம்பெயர் தேசங்களில் வசிக்கின்றீர்கள். அதனால் இங்கே உள்ள தங்களது காணிகள், வீடுகள் பராமறிப்பற்ற நிலையில் பற்றைகள் வளர்ந்து காடாக இருக்கிறது.

இதனால் அங்கே சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதுடன், சுகாதார சீர்கேடாகவும் உள்ளது. இவ்வாறான உங்களது காணிகளுக்கு அருகே வசிக்கின்ற மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். எனவே அவற்றினை சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுங்கள்.

அவ்வாறு சுத்தம் செய்வத தவறும் பட்சத்தில் நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராகி வருகின்றோம் என்றார்.

# யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அவர்கள் ஊர்காவற்துறை கடற்கோட்டை விவகாரத்துக்கு தீர்வு தர வேண்டும் என்கிறார் பிரதேச தலைவர் அன்னாராசா!



பொங்கல் பண்டிகைக்காக யாழ்ப்பாணம் வருகின்ற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஊர்காவற்றுறையில் உள்ள சுற்றுலா மையமான கடற்கோட்டை விவகாரத்திற்கு தீர்வு தர வேண்டும் என ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் அ.அன்னராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

12ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஊர்காவற்றுறை கடற்கோட்டை என்பது ஒரு பாரம்பரிய, பிரபல சுற்றுலாத்தலமாக காணப்படுகின்றது. இது ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஆளுகைக்குள் காணப்படுகின்றது.

இது கடற்படையினரின் கட்டுப்பட்டில் உள்ளது. இதனை தொல்லியல் திணைக்களத்தினர் மற்றும் கடற்படையினர் பயன்படுத்தி வருகின்றனர். கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இந்த கடற்கோட்டை இருப்பது எமக்கு ஆட்சேபனை அல்ல. அல்லது தொல்லியல் திணைக்களத்தின் பராமரிப்பில் கடற்கோட்டை இருப்பது எமக்கு பிரச்சனை இல்லை.

இந்த கடற்கோட்டைக்கு ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இருந்து 4 நிமிடங்களில் செல்லக்கூடிய நிலை காணப்படுகிறது. எனவே எமது ஆளுகைக்குள் உள்ள துறைமுகத்திலிருந்து, எமது ஆளுகைக்குள் உள்ள கடற்கோட்டையை சென்று பார்வையிடுவதற்கு ஜனாதிபதி ஆவன செய்ய வேண்டும்.

சுற்றுலா பயணிகள் எமது பாரம்பரிய துறைமுகங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இருந்து கடற்கோட்டைக்கு சென்று வருவதன் ஊடாக பிரதேச சபையின் வருமானம் அதிகரிக்கும். அத்துடன் எமது பகுதிக்கு சுற்றுலாவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

சுற்றுலா பயணிகள் எமது பிரதேசத்திற்கு வருவதன் ஊடாக எமது பிரதேசம் வலுப்பெறும், பிரதேசம் வலுப்பெறும்போது மக்களின் வாழ்வாதாரம் அதிகரிக்கும், மக்களின் வாழ்வாதாரம் அதிகரிக்கும் போது பிரதேச சபையின் வருமானம் அதிகரிக்கும். எமது பிரதேச சபையானது வருமானம் குறைந்த ஒரு சபையாக காணப்படுகின்றது. எனவே சுற்றுலா துறையின் ஊடாக வருமானம் அதிகரிக்க கூடிய வாய்ப்பு உள்ளது.

எனவே ஊர்காவற்றுறை துறைமுகத்திலிருந்து ஊர்காவற்துறை கடற்கோட்டைக்கு மக்கள் சென்று பார்வையிடுவதற்கு வழி வகுக்க வேண்டும் என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு புதிய அதிபராக முன்னாள் அதிபர் ஒருவர் மீண்டும் நியமனம்!



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக சிவஞானபோதம் தனஞ்சயன் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் குறித்த கல்லூரியில் கடந்த காலங்களில் ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர் ஆகிய பதவிகளை வகித்து, பின்னர் வெளி மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அதன்பின்னர் யாழ்ப்பாணம். இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக கடமை புரிந்தார்.

இவ்வாறான பின்னணியில் மீண்டு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்ட நிலையில் 13ம் திகதி அன்றையதினம் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதற்கு முன்னர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி அங்கு ஒழுக்கம், கல்வி ஆகியவற்றை சமாந்தரமாகப் பேணுவதில் அக்கறையாகவும் பாடகாலையின் வளர்ச்சிக்கு அளப்பரிய பணியாற்றியவர் என்றவகையிலும் சிறப்புக்குரியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# போதைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்க யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைக்கப்படும்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ஆனந்த விஜயபால!

விஷ போதைப் பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்கான “முழு நாடுமே ஒன்றாக” (ரக்ட்ட எகட்ட) தேசிய செயற்பாட்டு நடவடிக்கையின் ஒரு அங்கமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்றைய தினம் மாவட்ட செயற்பாட்டுக்குழு ஸ்தாபிக்கப்படுவதாகவும், நாட்டிற்கு கொண்டுவரப்படும் போதைப் பொருட்களை இல்லாது ஒழிப்பதும், அதன் வளங்களை இல்லாது அழிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும் என மாவட்டச் செயலகத்தில் 14ம் திகதிபுதன்கிழமை அன்றைய தினம் (14.01.2026) நடைபெற்ற கூட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் தெரிவிக்கையில், இதற்காக மாவட்ட மட்ட செயற்பாட்டு குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டு உரிய முறையில் பொலீஸ் மற்றும் பிரதேச மட்டத்திலே கடமையாற்றுகின்ற உத்தியோகத்தினுடைய வழிப்படுத்தலில் செயற்படுத்தப்படுவதாகவும் தெரிவித்ததார். எனினும் போதைப்பொருளின் பரவலின் ஆபத்தான கட்டம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும், இன்றைய சிறுவர்களான நாளைய தலைவர்களை ஆற்றுப்படுத்துகின்ற வழிபடுத்துகின்ற ஒரு அரிய செயற்பாடாக இந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது எனவும், போதை பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்காக முழு நாடும் ஒன்றாக தேசிய செயற்பாட்டு நிகழ்ச்சி திட்டத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட குழுக்களை ஸ்தாபித்தல் நடவடிக்கையில் இன்று கூடியுள்ளதாகவும், இவற்றுக்கு எதிராக முப்படைகளும் பொலிஸ் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார். மேலும், பொலிஸ், முப்படைகள் மட்டுமே இணைந்து இதனை ஒழிக்க முடியாது எனவும், அனைத்து பொது மக்களும் சேர்ந்தால் இதனை ஒழிக்க முடியும் எனவும் கௌரவ அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி தலைமையில் இதற்கான தேசிய சபை நிறுவப் பட்டுள்ளதாகவும், இரண்டாம் கட்டமாக ஒவ்வொரு 25 மாவட்டங்களிலும் மாவட்ட மட்ட குழு அமைக்கப்படும் எனவும், அதனடிப்படையில் இன்று யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்படுவதாகவும், இவ் மாவட்ட மட்டக் குழுவின் தலைவராக மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் அவர்களும், உறுப்பினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர், பொலிஸ், முப்படை அதிகாரிகள், தொடர்புடைய அரசாங்க அதிகாரிகள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கப்படுவார்கள் எனவும், செயலாளராக அரசாங்க அதிபரும் செயற்படுவார் எனவும் தெரிவித்ததுடன், கட்சி, சாதி, மதம் பேதம் இன்றி குழந்தைகளின் எதிர்காலத்தை வளப்படுத்துவதற்காக நாடு முழுவதும் போதை ஒழிப்பதற்கான பொறிமுறையை ஏற்படுத்த அனைவரும் உயிர்ப்புடன் இதற்கு பங்களிப்பு செய்வோம் எனவும் கௌரவ அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், பாடசாலை மட்டத்தில் இதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அதேபோல் அரச திணைக்களங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் போதைப் பொருளுக்கான கோரிக்கைகளை இல்லாது ஒழித்தல், இதற்கான வேலைத் திட்டத்தின் கீழ் தேசிய ரீதியாக உப குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது எனவும், மதத் தலைவர்கள் குழு, புனர்வாழ்வுக்கான குழு, பொதுமக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது எனவும், இச் செய்தியை ஊடகங்கள் பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டுமெனவும் கௌரவ அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றன எனவும், அதே சமயம், நாட்டின் 25 மாவட்டங்களிலும் தலா ஒரு மருத்துவக் கூறுகளுடன் கூடிய புனர்வாழ்வு நிலையங்கள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் போதைப் பொருள் ஒழிப்பின் பலமான இரு சபைகளாக அபாயகரங்கள் மற்றும் போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபை மற்றும் புனர்வாழ்வு சபை இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும், இந்த நிகழ்வின் வாயிலாக, இதற்கு ஏற்ற ஒரு பொருத்தமான கட்டடத்தை வழங்குவதற்கான நடவடிக்கையினை கடற்றொழில் அமைச்சர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோரிடம் கேட்டுக் கொள்வதாகவும், மேலும், இதனைவிட கல்பிட்டிய, மிகிந்தலை மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் இடைத்தங்கல் வீடுகளை ஒதுக்கியுள்ளதாகவும், அந்த மையங்களில் சிகிச்சை பெறுவோருக்காகவும், அவர்களுக்கு சேவை செய்யும் போதிப்பாளர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்காகவும் தேவையான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும், சமூகத்தில் காணப்படும் உண்மையான தேவையை கருத்தில் கொண்டு, போதைப் பொருள் அடிமைத்தன்மையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுப்பதே பிரதான நோக்கமாகும் எனவும், ஒருவரை குற்றவாளியாக சித்தரிப்பதற்கோ அவர்களை வமானப்படுத்துவதற்கோ அல்ல எனவும், அவர்களை மீண்டும் நல்ல வாழ்க்கைக்குத் திருப்புவதற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

மேலும், இன்றைய சமூகத்தில் பலர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி, அதிலிருந்து வெளியே வர முடியாமல் தவிக்கிறார்கள் எனவும், அவர்களில் பலர் கல்வி கற்கும் மாணவர்களாகவும் இருக்கிறார்கள் எனவும், ஆனால் அவர்கள் போதைப் பொருள் பயன்படுத்துகிறார்கள் என்பதை வெளிப்படையாக சொல்ல அஞ்சுகிறார்கள் காரணம் சமூக பழி, அவமானம் மற்றும் நிராகரிப்பு.

அத்தகைய நிலையை மாற்றவே செயற்படுகிறோம் எனவும் கௌரவ அமைச்சர் தெரிவித்தார். மேலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகள் அல்ல எனவும், அவர்களை நோயாளிகளாகவும் சமூகத்தின் ஒரு பகுதியாகவும் பார்க்க வேண்டும் எனவும், அவர்களுக்கு சிகிச்சையும், ஆலோசனையும், வழிகாட்டுதலும் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்ததார். மேலும், அவர்களுக்கு தொழில்கல்வி வழங்கி, சுயதொழில் அல்லது வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், அவர்கள் மீண்டும் தங்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் நிலைக்கு கொண்டு வருவது இச் செயற்றிட்டத்தின் இலக்காகும் எனவும், இந்த முயற்சியின் கீழ் சுமார் ஐயாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபை உடன்பட்டிருக்கின்றனர் எனவும், இந்த திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாக அல்ல, நடைமுறையில் அமுல்படுத்தப்படும் செயல் திட்டங்களாகவே முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனவே, இது ஒரு குற்றம்சாட்டும் நடவடிக்கை அல்ல மனிதநேய அடிப்படையில், சமூக மீட்புக்கான ஒரு முக்கியமான முயற்சியாகும் எனவும் இந்த பொறுப்பு அனைவருக்கும் உள்ளதாகவும், இந்த தேசிய சபையின் தலைவராக ஜனாதிபதி அவர்கள் செயற்படுவார் எனவும் இச் செயற்பாட்டிற்கான நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாகவும், போதைப் பொருள் தொடர்பான தகவல்களை வழங்க 1818 என்ற தொடர்பு இலக்கம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாகவும் இங்கு நம்பிக்கையுடன் தகவல்களை வழங்க முடியுமெனவும் கௌரவ அமைச்சர் தெரிவித்து, இச் செயற்றிட்டத்திற்கு அனைவரின் ஒத்துழைப் பினையும் வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.




## இணுவில் திருவூர் ஒன்றியம் – கனடா

*பெருமையுடன் வழங்கும் பொங்கல் விழா-2026*

காலம்: 24-01-2026 (சனிக்கிழமை)
இடம்: கனடா கந்தசாமி கோவில்- விழா மண்டபம்
733 Birchmount Road, ஸ்காபுரோ
நேரம்: மாலை 5 மணி

சங்கீதக்கச்சேரிகள், பாட்டு, பரதநாட்டியம், சிறுவர் நிகழ்ச்சி
எனப் பல வகையான கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.
கனடாவாழ் இணுவில் மக்களை இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும்
வண்ணம் அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: சாந்தினி சர்வானந்தா: (647) 200-2177
மு.கிருபாகரன்: (416) 389-7399
ப.கஜஜெயன்: (416) 732-5898

கனடிய செய்திகள் Canadian News

# 30 ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்துள்ள கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தை வாழ்த்திய ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன்!




கனடாவில் 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்று அமரர் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களை முதலாவது தலைவராகக் கொண்டு இயக்கத் தொடங்கி தற்பொழுது 30 ஆண்டுகளை கடந்து வெற்றிகரமான இயங்கிவருகின்ற "கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்திற்கு" ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் ஒன்றாரியோ அரசின் குடியுரிமை அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமாகிய அரிஸ் பாபிகியன் அவர்கள் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

கடந்த 9ம் திகதி வெள்ளிக்கிழமை தனது அலுவலகத்தில் அவரைச் சந்தித்த எழுத்தாளர் இணையத்தின் தற்போதையத் தலைவர் ரவி கனகசபை அவர்களோடு உரையாடியபோதே அவர் "கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தொடர்ச்சியான பங்களிப்பையும் கனடாவில் உள்ள தமிழ் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் இணைத்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளோடு முன்னேற்றத்தை அடைந்துள்ள அதன் வளர்ச்சியையும் பாராட்டினார்.

மேற்படி சந்திப்பின்போது. ரவி கனகசபை அவர்களுடன் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவருமான லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களும் உடனிருந்தார்.

*செய்தியும் படமும்: டினேஷ்*



## Toronto Mayor Her Worship Olivia Chow attends 'Thai Pongal' Celebrations at Scarborough Kanthasamy Hindu Temple

# கனடா கந்தசுவாமி ஆலய பொங்கல்விழாவில் கலந்து கொண்ட ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா சோ





கனடாவில் பொங்கல் தினமான 14-01-2026 புதன்கிழமையன்று கனடா கந்தசுவாமி ஆலய நிர்வாக சபையினர் ஏற்பாடு செய்திருந்த பொங்கல்விழா தொடர்பான விசேட பூசை மற்றும் வழிபாடுகளில் கலந்து கொண்ட ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா சோ அங்கு நிர்வாக சபையின் தலைவர் முத்துராஜலிங்கம் (முத்து) மற்றும் தனபாலசிங்கம் போன்ற முக்கிய உறுப்பினர்களால் வரவேற்கப்பெற்றார்.

ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா சோ அவர்களோடு தமிழ் பேசும் நகரசபை உறுப்பினர்களாக நீதன் சண்முகராஜா மற்றும் பார்த்தி கந்தவேள் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

அங்கு இவர்கள் அனைவரும் எமது தமிழர் கலாச்சார உடைகளோடு வந்திருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அங்கு வாழ்த்துரை வழங்கிய ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா சோ அவர்களின் ஈழத்தமிழ்கள் கனடிய தேசத்திலும் அதன் பிரதான நகரமாக விளங்குகின்ற ரொறன்ரோ மாநகரத்திலும் அனைத்து துறைகளிலும் முன்னேற்றத்தை அடைந்துள்ளார்கள் என்பதைக் காணும் போது தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*


# Thana Insurance Inc

**T20 INSURANCE**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

**PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

**NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

**20 YEARS TERM - NON MEDICAL INSURANCE**

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."



# தமிழ் நாட்டு முதலமைச்சர் எழுதிய கடிதம்: தமிழகத்தை நொதிக்கச் செய்தல்

---

தமிழ் தேசிய அரசியலை தேர்தல் அரசியலுக்கு வெளியே போராட்ட அரசியலாக நொதிக்க வைத்தால் மட்டும்தான் தமிழகம் நொதிக்கும். தமிழகம் நொதித்தால்தான் பிராந்தியம் நொதிக்கும். அப்பொழுதுதான் இந்திய மத்திய அரசின் வெளியுறவு முடிவுகளில் அது தாக்கத்தைச் செலுத்தும்.

---

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**த**மிழ் நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் ஈழத் தமிழர்கள் விவகாரம் தொடர்பாக மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கடிதம் எழுதியுள்ளார். "இலங்கையில் கொண்டுவரப்படும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களால் இலங்கை தமிழ் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கருத்தில் கொண்டு இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை பாதுகாத்திட உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி" எழுதப்பட்ட அக்கடிதத்தில், 1985இல் முன்வைக்கப்பட்ட திம்புக் கோட்பாடுகளின் அடிப்படைக் "கூறுகளை உள்ளடக்காமல் கொண்டுவரப்படும் எந்த ஒரு புதிய அரசியலமைப்பும் அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடர வழிவகுக்கும் என்றும் இது மீண்டும் மோதல்களுக்கும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்" என்றும் முதலமைச்சர் ஸ்டாலின் சுட்டிக்காட்டி உள்ளார்.

தமிழ் நாட்டு முதலமைச்சர் அவ்வாறு பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியமை என்பது தமிழ் தேசிய பேரவை சேர்ந்த முக்கியஸ்தர்கள் கடந்த மாதம் மேற்கொண்ட தமிழக விஜயத்தின் விளைவு என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியாவை மீறி இலங்கை இனப் பிரச்சினைக்கு எந்தவோர் வெளியேரசோ அல்லது பன்னாட்டு நிறுவனமோ தீர்வை தர முடியாது என்பதற்கு கடந்த 42 ஆண்டுகள் சான்று. இந்திய மத்திய அரசை அசைக்க வேண்டும் என்றால் தமிழகம் நொதிக்க வேண்டும் என்பது அடிப்படை விதி. எனவே இந்தியாவை கையாள்வது என்பது ஈழத்தமிழ் நோக்கு நிலையில் முதலில் தமிழகத்தை வெற்றிகரமாக கையாள்வது தான். மிகக்குறிப்பாக கட்சி பேதங்களைக் கடந்து தமிழகத்தை கையாள்வதுதான்.

தமிழ்நாட்டில் 8 கோடி தமிழர்கள் இருக்கத்தக்கதாக ஈழத் தமிழர்கள் அனாதைகளாக கை விடப்பட்டிருக்கும் ஒரு நிலைமை காணப்படுகிறது என்று அண்மையில் கஜேந்திரக்குமார் ஆற்றிய உரை ஒன்றில் தெரிவித்திருந்தார். கடந்த 13 ஆம் தேதி நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடந்த ஒரு அரசியல் கருத்தரங்கில் அவர் அவ்வாறு தெரிவித்தார்.

ஆனால் இந்தியாவை கையாள வேண்டும் என்று கூறிய விமர்சகர்களையும் செயற்பாட்டாளர்களையும் இந்தியாவின் ஆட்கள், முதுகெலும்பில்லாதவர்கள், அவர்களுக்கு பசிக்கும் போது சோறு தேவை என்பதற்காக இந்தியாவிடம் சம்பளம் வாங்குபவர்கள் என்று திட்டித் தீர்த்த ஒரு கட்சியின் தலைவர், இப்பொழுது இந்தியாவை கையாள வேண்டும் தமிழகத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்திருப்பது திருப்பகரமான மாற்றம்தான். ஆனால் இந்த மாற்றம் ஏற்படுவதற்கிடையில் கடந்த 16 ஆண்டுகளுக்குள் எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன? அந்த மாற்றங்களின் விளைவாக தமிழ் தேசிய அரசியலானது அதன் பேர பலத்தை இழந்துவிட்டது. அனைத்துலக அளவிலும் அது பலமாக இல்லை உள்நாட்டிலும் பலமாக இல்லை. அதன் விளைவாக தனக்கு தமிழ் மக்களின் ஆணை உண்டு என்று கூறும் தேசிய மக்கள் கட்சி அரசாங்கமானது தான் விரும்பிய ஒரு தீர்வை தமிழ் மக்களின் மீது திணிக்க கூடிய ஆபத்து அதிகமாக உள்ள ஒரு காலகட்டம் இது என்பதை தனது மேற்படி மேற்படி உரையில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினார்.

அதாவது ஈழத் தமிழர்கள் ராஜதந்திரத்தை கற்றுக் கொள்வதற்கிடையில் தாயகத்தில் தமிழ் மக்கள் தமது பேர சக்தியை பெருமளவுக்கு இழந்து விட்டார்கள் என்பதுதான குரூரமான கள யதார்த்தம் ஆகும். இந்த யதார்த்தத்தின் பின்னணியில்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ் தேசிய பேரவை தமிழகத்தை கையாள்வது என்ற முடிவை எடுத்திருக்கிறது. ஆனால் ஒப்பீட்டளவில் அதிக நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை கொண்டிருக்கும் தமிழரசு கட்சியானது அவ்வாறான முடிவை எடுத்திருக்கிறதா?

சிறீதரன் தமிழகத்தை நோக்கி தொடர்ச்சியாக சென்று வந்திருக்கிறார். அயலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுமந்திரன் போயிருக்கிறார். சாணக்கியன் போயிருக்கிறார். ஆனால் இவர்கள் தமிழகத்தில் உள்ள கட்சிகளின் தலைவர்களையும் முக்கியஸ்தர்களையும் பெருமளவுக்கு சந்தித்ததில்லை. அல்லது அவ்வாறு தமிழகத் தலைவர்களை சந்திக்க வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஒரு கட்சியாக முடிவெடுத்து, கட்சி தூதுக்குழு ஒன்று தமிழகத்திற்கு செல்லவில்லை.

தமிழகத்தை நீக்கும் ஓர் அரசியல் அணுகுமுறை தமிழரசு கட்சியிடம் இருந்தது என்ற பொருள்பட திவ்ய ஜீவனத்தில் நடந்த கருத்தரங்கில் கஜேந்திரக்குமார் உரையாற்றினார். நாடாளுமன்றத்தில் இப்போதுள்ள தமிழ் பிரதிநிதிகள் பெரும்பாலானவர்கள் சமஸ்டி கோரிக்கையை முன்வைத்து தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டவர்கள். அவர்கள் தங்களுடைய வாக்குறுதிகளை மீறிப் போகாமல் இருப்பதற்கு தமிழகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பொருள்கொள்ளத்தக்க விதத்தில் கஜனின் உரை அமைந்திருந்தது.

இனப்பிரச்சினைக்கு ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட த தீர்வை பெறுவதற்கு தமிழகம் தேவையில்லை. இதை கஜனின் வார்த்தைகளில் சொன்னால், தமிழ் தேசிய நீக்கம் செய்ய விரும்பும் சக்திகளுக்கு தமிழகம் தேவையில்லை. தமிழ் தேசிய நீக்கம் என்பது இனப்பிரச்சினை அரசியலைப் பொறுத்தவரை தமிழக நீக்கமும்தான்.

கடந்த 16 ஆண்டுகளில் குறிப்பாக சம்பந்தரின் காலத்தில் அவரிடம் இனப் பிரச்சினையை அனைத்துலக மய நீக்கம் செய்யும் ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்தது. வெளித்தரப்புகளின் அழுத்தமானது சிங்கள மக்களை பயமுறுத்துவது. அதனால் உள்நாட்டு தீர்வு ஒன்றை பெற முடியாது என்றும் சம்பந்தர் நம்பினார்.

ஆனால் இனப்பிரச்சினை எனப்படுவது சாராம்சத்தில் ஓர் அனைத்துலக பிரச்சினைதான். அதற்கு அனைத்து உலக தீர்வுதான் உண்டு என்ற மிக அடிப்படையான ஒரு உண்மையை சமன்பாட்டை சம்பந்தர் விளங்கிக் கொள்ளவே இல்லை. அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை. நிலை மாறு கால நீதியின் கீழான யாப்புருவாக்க முயற்சிகளில் அவருடைய நடவடிக்கைகள் அதை நிரூபித்தன. அந்த நடவடிக்கைகளை அவர் முழுக்க முழுக்க நம்பினார். அந்த நம்பிக்கையினால்தான் அவர் ஒவ்வொரு நல்ல நாள் பெருநாளுக்கும் தீர்வு வரும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.

ஆனால் மூன்றாவது தரப்பொன்றின் அழுத்தம் இல்லாமல் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒரு தீர்வுக்கு வர முடியாது என்ற கசப்பான யதார்த்தம் அவருடைய முகத்தில் அறைந்த பொழுது ஒரு தோல்வியுற்ற தலைவராக அவர் இறந்தார். அவருடைய யாப்புருவாக்க முயற்சியின் பங்காளிகளில் ஒருவராகிய மைத்திரியே அந்த முயற்சியை காட்டிக் கொடுத்தார். ஏனென்றால் மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தமோ கண்காணிப்போ அங்கே இருக்கவில்லை. நிலைமாறு கால நீதியின் கீழ் ஐநாவின் மனித உரிமைகள் பேரவை ஆனது அவ்வாறு அழுத்தங்களை பிரயோகிக்க கூடிய ஒரு தரப்பாக இருக்கவில்லை.

எனவே ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வை பெறுவதற்கான தமிழ்த் தேசிய நீக்க அரசியல் என்பது அதன் நடைமுறை அர்த்தத்தில் தமிழக நீக்கமும் தான். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்டு ஒரு நாடாளுமன்றம் தரக்கூடிய எந்த ஒரு தீர்வும் வெளிப்படையான சமஸ்டியாக இருக்காது என்பதே கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலான அனுபவம். அதை இன்னொரு விதமாகச் சொன்னால் தன்னை சமஷ்டிக் கட்சி என்று அழைத்துக் கொள்ளும் தமிழரசுக் கட்சியின் அனுபவம் என்றும் கூறலாம்.

எனவே இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்றத்துக்கு ஊடாக கிடைக்கும் எந்த ஒரு தீர்வும் அப்படித்தான் இருக்கும். நாடாளுமன்றத்துக்கு வெளியே மூன்றாவது தரப்பொன்றின் அழுத்தம் இருக்க வேண்டும்.

அவ்வாறு மூன்றாவது தரப்பு ஒன்றும் அழுத்தம் இருந்த காரணத்தால் தான் இந்திய இலங்கை உடன்படிக்கை சாத்தியமாகியது. ரணில்- பிரபாகரன் உடன்படிக்கை சாத்தியமாகியது.

மூன்றாவது தரப்பு உள்ளே வர வேண்டும் என்றால் தமிழ் மக்கள் போராட வேண்டும். தமிழ் மக்கள் போராடினால்தான் ஒரு மூன்றாவது தரப்பை தமக்கு சாதகமாக அரங்கில் இறக்கலாம். தமிழகத்தை கையாள்வதற்கும் அதுதான் முன் நிபந்தனை. தமிழ் மக்கள் தாங்கள் கொந்தளிக்காமல் தமிழகம் தங்களுக்காக கொந்தளிக்கவில்லை என்று கேட்பது பொருத்தமில்லை. தமிழ் தேசிய அரசியலை தமிழ் கட்சிகள் நொதிக்க வைக்கவில்லை என்றால் தமிழகம் எப்படி நொதிக்கும்?

எனவே முதலில் தமிழ்த் தேசிய பேரவையும் உட்பட தமிழ் கட்சிகள் அனைத்தும் தமிழரசியலை நொதிக்க வைக்க வேண்டும். ஒவ்வொரு பௌர்ணமி நாளும் தையிட்டியில் நொதிப்பதால் மட்டும் தமிழரசியலை தொடர்ச்சியாக நொதிக்க வைக்க முடியாது. அதற்குமப்பால் தமிழ் தேசிய அரசியலை தேர்தல் அரசியலுக்கு வெளியே போராட்ட அரசியலாக நொதிக்க வைத்தால் மட்டும்தான் தமிழகம் நொதிக்கும். தமிழகம் நொதித்தால்தான் பிராந்தியம் நொதிக்கும். அப்பொழுதுதான் இந்திய மத்திய அரசின் வெளியுறவு முடிவுகளில் அது தாக்கத்தைச் செலுத்தும்.

---

### வீணாவின் கவிக்கணை

பொங்கல் நாளாம்,
தைத்திருநாள்,
உழவர் வாழ்வின்
பொன்நாள்,
தமிழர் பொங்கி
மகிழ்ந்திடும்
அந்நாள்,
உற்றார் உறவினர்
கூடிடும் நன்நாள்,
இயன்றவரை
வரியவருக்கு
தருவது நன்மை,
பகிர்ந்து உண்பது
என்றும் அருமை
🙏🙏🙏



# "அயலகத் தமிழர் தின நிகழ்வை நடத்தும் முதல்வர் ஸ்டாலின், தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லையை தாண்டாது இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்"

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் வேண்டுகோள்

- எஸ்.ஆர்.லெம்பேட் (13-01-2026)



அயலகத் தமிழர் தினம் என்ற நிகழ்வை நாங்கள் வரவேற்றாலும் வட பகுதி மீனவர்களின் நலனும் அதில் உள்வாங்கப்பட வேண்டும். இன்று வரை தமிழக மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.அதற்கு காரணம் தமிழக முதல்வரை சேரும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 13ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை (13-01-2026) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அயலகத் தமிழர் தின நிகழ்வை நடத்தும் தமிழக முதல்வர் வட பகுதி மீனவர்களின் நலன் கருதி தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லை யை தாண்டாது இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதுவே அவர் ஈழத் தமிழர்களுக்கு செய்யும் பெரிய உபகாரமாகும். தமிழகத்தில் இடம்பெற்ற அயலக தமிழர் தினம் என்ற நிகழ்வு தமிழக முதல்வர் முக ஸ்டால-ின் தலைமையில் விமர்சையாக நடைபெற்றிருக்கின்றது. இலங்கையில் இருந்து அதற்கான பிரதிநிதிகள் சென்றிருக்கின்றார்கள் பல விடயங்கள் குறிப்பாக தமிழால் இணைகின்ற பல விடையங்கள் அங்கு இடம் பெற்றுள்ளது.

இது காலத்தின் தேவையாகும், உண்மையிலேயே இவ்வாறான செயற்பாடுகள் தான் தமிழ் என்ற உணர்வையும் தமிழோடு இணைய வேண்டும் என்ற அந்த ஆசையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தி இருந்தது.

உண்மையில் இரு நாட்டை நாங்கள் எடுத்துக் கொண்டால் தமிழால் இணைவோம் என்பதற்கு பொருத்தமான நாடாக தமிழகத்துக்கும் வடபகுதிக்கும் நிறைய உறவு இருக்கிறது. குறிப்பாக இந்தியாவிற்கும் இலங்கைக்குமான உறவு தமிழால் இணையக் கூடிய வகையில் எந்த நாடுகளும் இல்லை. இலங்கைக்கு தான் அந்த வார்த்தை பொருத்தமானது.

எனவே நான் கூற வருகின்ற விடயம் இந்த தமிழால் இணைவோம் என்பது வார்த்தை. உண்மையில் பாராட்ட கூடியதாக இருந்தாலும் தமிழால் நாங்கள் இணைந் திருக்கின்றோமா?

தமிழ்நாட்டில் இருக்கிற தமிழர்களுக்கும் இலங்கை வடபகுதியில் இருக்கும் தமிழர்களுக்குமான உறவு தொப்புள் கொடி உறவு என்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த உறவு ரீதியாக இது ஒரு அரசியலுக்கும் மொழிக்குமானது அல்ல.

அதையும் தாண்டி வாழ்வாதாரம் ஒன்றிணைவு அவர்களின் குடும்ப நிகழ்வுகள் அனைத்தும் அதன் ஊடாக பார்க்கப்பட வேண்டியதொன்றாகும். இருந்த போதும் இங்கு நடைபெறுகின்ற விடயம் தமிழக மீனவர்களால் வடபகுதியில் இருக்கும் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

இந்த நிகழ்வு தொடர்ச்சியாக பல வருடங்கள் நடைபெற்று வருவதாக குறிப்பிடப்பட்டு இருந்தாலும் தொடர்ச்சியான இந்த பாதிப்பு தொடர்பாக எந்த விதமான பேச்சுகள் அவர்களுக்கு செயற்பாட்டு வாயிலாக அந்த உறவை கட்டி எழுப்பக்கூடிய எந்த செயற்பாடுகளும் இந்த நிகழ்வுகளில் நடைபெறுகின்றதா?

இலங்கையில் இருந்து கலந்து கொண்ட செந்தில் தொண்டமான் என்னும் ஊழல்வாதி இலங்கை சார்ந்து சென்றாலும் மலையும் சார்ந்த செல்வதாகவே தன்னைக் காட்டிக் கொள்கின்றார். அவர் மலையக மக்களுக்கும் எவ்வித உதவிகளையும் செய்யவில்லை. ஆனால், மலையகம் சார்ந்த விஷயங்களை அவர் முன்னிலைப் படுத்துவது போன்று அங்கு உரையாற்றுகின்றார். அத்துடன், வடக்கு சார்ந்த மீனவர்கள், வடக்கு,கிழக்கில் இருக்கின்ற மக்கள் தொடர்பாக பேசுவதற்கு அவர் அச்சப் படுகின்றார். அல்லது பேசாமல் தவிர்த்து வருகிறார்.

எனவே இலங்கையில் இருந்து செல்கின்ற பிரதிநிதிகளை நாங்கள் இலங்கை பிரதிநிதிகளாக பார்க்கிறோம்.எனவே அவர் இங்குள்ள விடையங்களை முன்னுரிமைப் படுத்த வேண்டும்.அயலகத் தமிழர் தினம் என்கிற சொல்லை நாங்கள் வரவேற்றாலும், வட பகுதி மீனவர்களின் நலனும் அதில் உள்வாங்கப்பட வேண்டும்.

தமிழகத்தினால் இழைக்கப் படுகின்ற அநீதிக்கு பதில் கூற வேண்டிய பொறுப்பு தமிழக முதலமைச்சருக்கு இருக்கிறது. வெறுமனே தமிழக உறவை மாத்திரம் பயன்படுத்தி தமிழகத்திற்கும், தமிழ் மக்களுக்குமான மொழி உறவை ஊக்கப் படுத்துகின்ற அதே நேரம் இங்கு மக்கள் படுகின்ற துன்பங்களையும் அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தொழில் நடவடிக்கைகள் இன்றி வீடுகளில் முடங்கி உள்ளனர். அவர்களுக்கான எந்த இழப்பீடுகளும் இதுவரை வழங்கப்படவில்லை. ஒரு சில உதவிகள் வழங்கப்பட்டாலும் அது அவர்களுக்கு போதுமானதாக இல்லை.

மக்கள் அரசாங்கத்தின் கருத்துகளுக்கு மதிப்பளித்து ஓய்வெடுக்கும் நிலையில் தமிழக கடற்தொழிலாளர்கள் எமது கடற்பகுதிக்குள் வந்து சூறை யாடுகின்ற செயல்பாடு இன்று வரை தொடர்கிறது. வெறுமனே ஒரு சில படகுகள் கைது செய்யப்பட்டாலும்,அவர்களின் வருகையை இன்று வரை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

அவர்களை கட்டுப்படுத்த முடியாமைக்கான காரணம் தமிழக முதல்வரை சேரும். அவர் தான் இத்தொழிலை ஊக்குவித்து வருகிறார் என வட பகுதி மீனவர்கள் கருதுகின்றனர். எனவே தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லை யை தாண்டாது இருக்க அந்நாட்டு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் 50 மெகாவாட் காற்றாலை மின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க






- எஸ்.ஆர். லெம்பேட் (15-01-2026)

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தித் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாக, மன்னாரில் 50 மெகாவாட் "ஹேவிண்ட் வன் லிமிடெட் நிறுவனத்தின்" (HyWind One) காற்றாலை மின் திட்டத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் 15ம் திகதி அன்று வியாழக்கிழமை (15-01-2026) மன்னார் கொன்னயன் குடியிருப்பில் நடைபெற்றது.

ஹேலிஸ் பென்டன் (Hayleys Fentons) மற்றும் ஹேலிஸ் (The World of Hayleys) குழுமத்தின் அங்கமான ஹேவிண்ட் வன் லிமிட்டெட் நிறுவனம், இலங்கை மின்சார சபையுடன் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இந்நிகழ்வில் வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வலுசக்தி பிரதி அமைச்சர் இலியாஸ் முஹம்மது அஹ்ரம், கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரும், மன்னார் மாவட்டச் செயலாளர் கே.கனகேஸ்வரன், முப்படை அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

மன்னார் பகுதியில் முன்னெடுக்கப்படும் இந்த 50 மெகாவாட் காற்றாலை மின் திட்டமானது, நாட்டின் தேசிய மின் வழங்கலுக்கு தூய எரிசக்தியை சேர்ப்பதோடு, சூழலுக்கு உகந்த மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் ஒரு முன்னோடித் திட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் 18 மாதங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.



# "மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு கட்சி பேதம் இன்றி உதவுவதே எமது நோக்கம்"

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட பிரதான அமைப்பாளர்

- எஸ்.ஆர். லெம்பேட் (14-01-2026)

மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 5 ஆயிரம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு கட்சி பேதங்களின்றி உதவிகளை வழங்குவதே எமது முதல் கட்ட இலக்கு என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட பிரதான அமைப்பாளர் என்.எம்.எம்.பாரிஸ் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் 5 ஆயிரம் குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு 14ம் திகதி அன்றைய தினம் புதன்கிழமை (14-01-2026) மாலை மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சின்ன வலயன்கட்டு கிராமத்தில் இடம் பெற்றது.

இதன் போது முதல் கட்டமாக குறித்த கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்த பின் உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சி இடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் 5 ஆயிரம் வறிய குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். வறிய குடும்பங்களை இனம் கண்டு அவர்களுக்கு உதவிகளை மேற்கொள்வதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதல் திட்டமாக உள்ளது. முதலாவது ஆரம்ப நிகழ்வு அன்றைய தினம் புதன்கிழமை (14) மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வலயன்கட்டு கிராமம் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கிராமம் பின்தங்கிய நிலையில் உள்ளது.

இந்த மக்களை யாரும் கண்டு கொள்வதில்லை. நாங்கள் முன் மாதிரியாக நடக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இக்கிராமத்தை முதல் கட்டமாக தெரிவு செய்துள்ளோம். எதிர்வரும் காலத்தில் வலயன்கட்டு கிராமம் விழிப்பான கிராமாக மிளிரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எதிர்வரும் காலங்களில் உங்களை தேடி பலர் வருகை தர உள்ளனர். எங்களுடைய திட்டத்தின் கீழ் வறுமையில் உள்ள அனைவருக்கும் உதவிகள் வழங்கப்பட உள்ளது. வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு கட்சி பேதங்களை கடந்து நாங்கள் உதவிகளை முன்னெடுக்க உள்ளோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பொய்யான “முறைமை மாற்றம்”: அரசியலமைப்பை பலவீனப்படுத்தி தேசியப் பாதுகாப்பு அரசுக்கு அதிகாரமளித்தல்

இந்தக் கசப்பான வரலாற்றுப் பாடங்கள் அதிகாரத்தில் உள்ளவர்களிடம் இருக்கும்போது உறுதியான கொள்கை தீர்மானங்களாக பரிணமிக்காதது வருத்தத்துக்குரியது.

---

மக்கள் விடுதலை முன்னணி (JVP) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் உத்தேச “பயங்கரவாதத்துக்கு எதிராக அரசைப் பாதுகாக்கும் சட்டம்” (PSTA) குற்றம் புரிந்தோரை விட தம் மீதுதான் அதிக குற்றங்கள் சுமத்தப்படுவதாகச் சொல்லும் அரசின் அனுதாபிகளின் இலகுவான தற்காப்பு வாதத்தைப் பொய்யாக்கியுள்ளது.

### கடந்தகால துஷ்பிரயோகங்களை மீண்டும் தொடர்தல்

இவ்விடயத்தின் தீவிரத்தன்மையை அனுசரித்து மிகவும் வெளிப்படையாகச் சொல்வதென்றால், புதிதாக முன்மொழியப் பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தில் (PSTA) தந்திரமாகச் சேர்க்கப்பட்டுள்ள மிக மோசமான திருத்தங்களை நத்தார் பண்டிகைக்கால கொண்டாட்டத்துக்கு மத்தியிலும் எம்மால் சாதாரணமாகக் கடந்து செல்ல முடியாது. பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் (CTA, 2018) மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபு (ATB, 2023) ஆகிய பழைய சட்டங்கள் குறித்த “முறைமை மாற்ற” அரசாங்கத்தின் மீள் பொருள்கோடல் அவற்றை விட மோசமாக இருக்க முடியாது என்ற எதிர்பார்ப்புடன் ஆரம்பத்தில் அணுகப்பட்ட போதிலும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின் நிலைமை இதுதான்.

அந்த எதிர்பார்ப்பை சிதைக்கும் வகையில், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் முன்னறிவிக்கும் பயங்கரங்களிலிருந்து விலகி வருவது மென்மேலும் கடினமாகி வருகிறது. உதாரணமாக, ஒரு “நபர்” இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்யத் தயாராகிறார் என நம்புவதற்கு “நியாயமான காரணங்கள்” இருக்கும் பட்சத்தில் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்படக்கூடிய “மட்டுப்படுத்தும் உத்தரவுகளை” எடுத்துக்கொள்வோம். உத்தேச பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம் எதனைப் பிரதியீடு செய்ய அவசியமான பயங்கரவாதத் தடைச் சட்டமானது (PTA) இத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்க அனுமதியளிக்கிறது.

“ஒரு நபர் சட்டவிரோதமான செயலில் ஈடுபட்டுள்ளார் அல்லது அதனுடன் தொடர்பில் இருக்கிறார் என நம்புவதற்கு அல்லது சந்தேகிப்பதற்கு அமைச்சருக்கு தகுந்த காரணம் இருக்கும் பட்சத்தில்...” இது நிகழ்கிறது (பிரிவு 11, PTA). இதன் அடிப்படையில், இலக்கு வைக்கப்பட்ட ஒரு நபர் தனது வசிப்பிடத்திற்கு வெளியே நடமாடுவது, இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ பயணம் செய்வது போன்றவற்றுடன், ஏனைய விடயங்களும் “மட்டுப்படுத்தப்படலாம்”; அத்துடன் செயற்பாடுகள், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றுக்கும் இதேபோன்ற தடைகள் விதிக்கப்படலாம். அதன் உச்ச வரம்பு வரை துஷ்பிரயோகம் செய்யப்பட்ட இந்த அதிகாரங்கள், தெற்கில் (1980களில்) இரண்டாவது ஜே.வி.பி கிளர்ச்சியின் போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அதன் உறுப்பினர்களுக்கு எதிராக வகைதொகையின்றிப் பிரயோகிக்கப்பட்டன.

### பொதுமக்களின் கரிசனைகளுக்கு பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபு (ATB) பதிலளிக்கிறது

2018 ஆம் ஆண்டில், ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்ட வரைபு (CTA) இத்தகைய அதிகாரங்களை வழங்குவதைத் தொடர்ந்தது. சட்டத்தின் 82 ஆவது உட்பிரிவு பொலிஸ் மா அதிபரின் பரிந்துரையின் பேரில் “மட்டுப்படுத்தும் உத்தரவுகளை” பிறப்பிப்பதற்கான அதிகாரத்தை அமைச்சருக்கு அளித்தது. அதனை விமர்சித்தோருக்கு பாதிக்கப்பட்ட ஒரு நபர் இத்தகைய உத்தரவுகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு என மேலோட்டமான ஒரு வாய்ப்பை வழங்கிய போதிலும், அன்று அது ஒரு குறிப்பிடத்தக்க எதிர்ப்பலையை ஏற்படுத்தியது. பொதுமக்களின் கரிசனைகளுக்கு பதிலளிக்கும்




விதமாக பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபு அத்தகைய உத்தரவுகளை பொலிஸ் மா அதிபரின் பரிந்துரையின் பேரில் வெளியிடுவதற்கான அதிகாரத்தை ஜனாதிபதியிடம் ஒப்படைத்தது.

இந்தச் சட்டத்தின் கீழ் எவரேனும் ஒரு நபர் குற்றத்தைச் செய்யவதற்கு முனைகிறார் என நம்புவதற்கு “நியாயமான காரணங்கள்” இருக்க வேண்டும் என உட்பிரிவு 80 நிபந்தனை விதித்ததோடு, சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்த பின்னரே இந்த அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அதன்படி, ஒரு உத்தரவைப் பிறப்பிப்பது என்பது “தேவையானது” என்பதற்கும்; “ஒரு குற்றம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கும்”, “விசாரணைகளை நடத்துவதற்கும்” உட்பட்டதாக இருந்தது.

அந்த உத்தரவானது, “இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் அல்லது இழைக்கப்பட வாய்ப்புள்ள குற்றத்தின் அளவுக்கு பொருத்தமானதாக” இருப்பதுடன், அது “அரசியலமைப்பின் விதிகளின்படி, தன்னிச்சையாகச் சுதந்திரத்தைப் பறிப்பதாகவோ அல்லது அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதாகவோ” அமையக்கூடாது. அதேவேளை, இத்தகைய உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்வதற்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபு குறிப்பாக வழிவகுத்திருந்தது.

### பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபின் வரையறுக்கப்பட்ட பாதுகாப்புகளை நிராகரித்தல்

எவ்வாறாயினும், இந்த பாதுகாப்பு நடைமுறைகள் அனைத்தையும் தலைகீழாக மாற்றி, உத்தேச பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபானது, பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் சாத்தியப்பாடுகளைக் குறைத்துள்ளது. உட்பிரிவு 64, “மட்டுப்படுத்தும் உத்தரவுகளை” கோருவதற்கான அதிகாரத்தை பிரதி பொலிஸ் மா அதிபர் (DIG) பதவிக்கு குறையாத ஒரு பொலிஸ் அதிகாரிக்கு வழங்குகிறது; அவர் இது தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தை அணுக முடியும். இந்த திருத்தத்தின் விளைவுகளை குறைத்து மதிப்பிடவோ அல்லது விடயங்களின் போக்கில் முக்கியமற்றது என அலட்சியப்படுத்தவோ முடியாது.

உத்தேச பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபின் 64 (3) வது உட்பிரிவின் கீழ் வரும் “மட்டுப்படுத்தும் உத்தரவுகள்” முழு அளவிலான தடைகளை உள்ளடக்குகின்றன. இவை (அ) வசிப்பிடத்துக்கு வெளியே நடமாடுதல், (ஆ) இலங்கைக்குள் பயணம் செய்தல், (இ) வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தல் மற்றும் (ஈ) வசிப்பிடத்துக்கும் பணிபுரியும் இடத்துக்கும் இடையிலான சாதாரண வழியைத் தவிர்த்து வெளியே பயணம் செய்தல் ஆகியவற்றை மட்டுப்படுத்தலாம். அத்துடன், உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள “குறிப்பிட்ட நபர்களுடன்” (உ) தொடர்பு கொள்வது அல்லது பழகுவது அல்லது இவை இரண்டின் மீதும் மட்டுப்படுத்தல்கள் விதிக்கப்படலாம்.

மேலும் இதில், (ஊ) இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமிழைப்பதற்கு வழிவகுக்கக்கூடிய குறிப்பிட்ட சில நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுத்தலும் உள்ளடங்கும். முன்னைய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபில் இருந்த பட்டியலை விரிவுபடுத்தியுள்ள உத்தேசபயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமானது, (எ) உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு இடத்துக்கும் செல்வதைத் தடுத்தல் எனும் புதிய மட்டுப்படுத்தலையும் சேர்த்துள்ளது. இத்தகைய உத்தரவுகள், பாதிக்கப்பட்ட நபர் ஒரு பொலிஸ் நிலையத்தின் முன் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையையும் உள்ளடக்கியிருக்கலாம். ஆரம்பத்தில் ஒரு மாத காலத்துக்குப் பிறப்பிக்கப்படும் இந்த உத்தரவுகள், நீதவானின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அதிகபட்சமாக ஆறு மாதங்கள் வரை நீடிக்கப்படலாம்.

### உரிமைகளுக்கான பாதுகாப்புகளை வலிந்து பலவீனப்படுத்தும் உள்நோக்கம்

மிகவும் பாரதூரமான விடயம் என்னவென்றால் முன்னைய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் குறிப்பிடப்பட்டிருந்த “மட்டுப்படுத்தல் உத்தரவுகளை” பிறப்பிப்பதற்கான அனைத்து தேவைப்பாடுகளையும் இரக்கமின்றி நிராகரிப்பது பொருத்தமானது என பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் கருதியுள்ளமை ஆகும். இந்தச் சட்டத்தை இயற்றியோர் இத்தகைய அசாதாரணமான அதிகாரங்களைப் பிரயோகிப்பதை பொலிஸ் உத்தியோகத்தர்களின் தற்துணிவுக்கு (அது தகுதியற்றதாக இருப்பினும்) விட்டுள்ளனர். எனவே, சிவில் உரிமைப் பாதுகாப்புகளைப் பலவீனப்படுத்தும் நோக்கத்தைத் தவிர, பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபு (சர்ச்சைக்குரிய) தரநிலையிலிருந்து கூட வலிந்து விலகிச் செல்வதற்கான காரணமாக எதனைக் கூற முடியும்?

அதேவேளை, பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டத்தில் காணப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யும் ஏற்பாடு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபில் “மட்டுப்படுத்தல் உத்தரவுகளுக்கு” எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்யும் உரிமை ஆகிய இரண்டுமே உத்தேச பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டத்தில் அப்பட்டமாக நீக்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் விரிவாக கலந்துரையாடப்பட்டது போல், பயங்கரவாத தடைச் சட்டத்தின் “சட்டவிரோத நடவடிக்கை” என்பதற்கான வரைவிலக்கணமானது அதன் குறைபாடுகள் அத்தனையையும் தாண்டி உத்தேச பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தின் பரிந்துரைக்கும் “குற்றங்களின்” நீண்ட பட்டியலை விடக் குறைவான பரப்பினைக் கொண்டதாகும். இந்த உட்பிரிவு எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்பதை கற்பனை செய்து பார்ப்பது ஒன்றும் கடினமான காரியமல்ல.

“பயங்கரவாதக் குற்றங்கள்” எனும் அதீதமான கவலையளிக்கும் விரிவுபடுத்தப்பட்ட பட்டியலையும், அத்துடன் “பயங்கரவாதம் சார்ந்த/செயல்கள்”, “பயங்கரவாதத்தை ஊக்குவித்தல்” மற்றும் “பயங்கரவாத வெளியீடுகளை விநியோகித்தல்” போன்ற அச்சமூட்டும் வகையில் பரந்த வரைவிலக்கணங்களைக் கொண்ட உப குற்றங்களையும் இதனுடன் சேர்த்து வாசித்தால் அரசியலமைப்பின் 14 (1) (h) உறுப்புரையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நடமாடுவதற்கான சுதந்திரம் மீறப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன என்பதைக் காணலாம். “மட்டுப்படுத்தல் உத்தரவுகள்” போலன்றி, ஊரடங்கு உத்தரவுகள் மற்றும் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் உத்தேச பயங்கரவாதத்திலிருந்து அரச பாதுகாக்கும் சட்டமூலத்திலும் ஜனாதிபதியின் வசமே மாற்றமின்றித் தொடர்கிறது.

# “வறுமை ஒரு கலைஞனுக்கு ஒரு தடையல்ல. அது, அவனுக்குள் இருக்கும் படைப்பாற்றலைத் தட்டி எழுப்பும் ஒரு கருவி என்றே நான் ஆழமாக நம்புகிறேன்”

## யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓவியத்துறை பட்டதாரி ஆசிரியரான கீர்த்திகா பாபு அவர்களோடு ஒரு சந்திப்பு



**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**

“**எ**னது போராட்டங்களே எனக்கு முதல் ஆசான்கள். குறைந்த வசதிகளுடன் வளர்ந்தமை, சாதாரணமானவற்றிலும் அழகைக் காணவும், சவால்களைக் கண்டு அஞ்சாமல் இருக்கவும் எனக்குக் கற்றுத்தந்தது, இன்று நான் வரையும் ஒவ்வொரு தூரிகை வீச்சும் அந்த அனுபவங்களின் வெளிப்பாடும் ஆகும். அத்துடன், கடந்த கால வலிகளை ஓவியங்களாக மாற்றி, நம்பிக்கை மற்றும் வாழ்வாதாரத்தைப் பற்றி எனது கலை பேசுகிறது. வறுமை என்பது ஒரு தடையல்ல, அது ஒரு கலைஞனுக்குள் இருக்கும் படைப்பாற்றலைத் தட்டி எழுப்பும் ஒரு கருவி என்பதை நான் ஆழமாக நம்புகிறேன்”.

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் ஓவியத்துறை பட்டதாரியும் ஆசிரியையுமான கீர்த்திகா பாபு **கனடா உதயன்** ஆசிரிய பீடத்திற்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கழக வளாகத்தில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் கீர்த்திக பாபு அவர்கள் தனது மாணவப் பருவம், பல்கலைகழகக் கல்வி மற்றும் ஓவியத்துறையிலான கற்கை. மற்றும் அது தன்னை அழைத்துச் சென்ற பாதை. அப்போது சந்தித்த சவால்கள் ஆகியவற்றை தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

எமது முதற் கேள்வியாக அமைந்த **“உங்களது சிறுபராயம் சவால்கள் நிறைந்தது. இந்த போராட்டங்கள் உங்களது கலை மீ-தான பார்வையை எவ்வாறு செதுக்கி எடுத்தன?”** என்பதற்கு அளித்த





பதிலிலியே அவர் மேற்கண்டவாறு வெளிப்படையாகவும் தெளிவாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவரிடம் நாம் தொடுத்த வினாக்களும் அவற்றிக்கான விடைகளும் பின்வருமாறு அமைகின்றன.

**கஷ்டமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் யாழ் பல்கலைக்கழகத்தில் நுண்கலைமாணி (BFA) பட்டத்தை நிறைவு செய்தது பற்றிய உங்கள் அனுபவம் என்ன?**

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றது ஒரு கனவு நனவான தருணம். ஓவியத்திற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்குக் கூட பணமில்லாத நாட்களை நான் கடந்திருக்கிறேன். ஆனால், அங்கிருந்த கல்விச் சூழலும் நண்பர்களின் ஊக்கமும் என்னை முன்னோக்கி நகர்த்தின. இது வெறும் பட்டம் மட்டுமல்ல, திறமைக்கு பண-பலம் தடையல்ல என்பதற்கான சான்று. அந்தக் கல்வி எனக்குத் தொழில்நுட்ப அறிவை மட்டுமல்ல, ஒரு கலைஞராகச் சமூகத்தில் எப்படி நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற கௌரவத்தையும் கற்றுக் கொடுத்தது.

**சுவர் ஓவியங்கள் மற்றும் எண்ணெய் வர்ண (Oil Painting) ஓவியங்களில் நீங்கள் விசேட கவனம் செலுத்த காரணம் என்ன?**

சுவர் ஓவியங்கள் கலைக்கூடங்களுக்கு வெளியே சாதாரண மக்களையும் சென்றடைகின்றன, அதனாலேயே எனக்கு அவை பிடிக்கும். அவை பொது இடங்களுக்கு ஒரு புது உயிரைக் கொடுக்கின்றன. அதேவேளை, எண்ணெய் வர்ண ஓவியங்கள் (Oil Painting) மனித உணர்வுகளின் ஆழத்தை வர்ண அடுக்குகளின் ஊடாக நேர்த்தியாகக் காட்ட எனக்கு உதவுகின்றன. வெற்றுச் சுவர்களைக் கலைப் படைப்புகளாக மாற்றுவது எனக்கு ஒருவிதமான விடுதலையைத் தருகிறது. இது சாதாரண வீதிகளையும் ஒரு திறந்தவெளி அருங்காட்சியகமாக மாற்றும் ஒரு முயற்சியாகும்.

**கீர்த்தியின் கிரியேட்டிவ் பெலட் (Keerthy's Creative Palette) கலை அகாடமியை ஆரம்பிக்க உங்களைத் தூண்டியது எது?**

கலையை உணர்வுபூர்வமாகக் கற்பிக்க ஒரு தளம் வேண்டுமென நான் விரும்பினேன். எனது சிறுவயதில் எனக்குக் கிடைக்காத வழிகாட்டலை மற்றவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற பொறுப்பு எனக்கு இருந்தது. “கீர்த்தியின் கிரியேட்டிவ் பெலட்” என்பது சிறுவர்களும் பெரியவர்களும் எவ்வித தயக்கமுமின்றித் தங்களது கற்பனைத் திறனை வெளிப்படுத்தும் ஒரு சரணாலயம். இங்கு நாம் நுட்பங்களை மட்டுமல்ல, ஒரு கலைப் படைப்பின் பின்னால் இருக்கும் ஆன்மாவையும் தேடுகிறோம்.

ஒவ்வொரு மாணவனும் தங்களுக்குள் இருக்கும் தனித்துவமான கலைஞனை இங்கு கண்டெடுக்கிறார்கள்.

**அடுத்த தலைமுறை சிறுவர்களுக்கு அறிவை பகிர விரும்புகிறீர்கள். அவர்களுக்கு நீங்கள் கற்பிக்கும் மிக முக்கியமான பாடம் எது?**

நிழலிடுதல் அல்லது வர்ணக் கலவை போன்ற நுட்பங்களைத் தாண்டி, கலை என்பது ஒரு மொழி என்பதையே நான் எனது மாணவர்களுக்குக் கற்பிக்கிறேன். உங்களது பின்னணி உங்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்காது என்று நான் அவர்களுக்குக் கூறுவேன். தூரிகை கொண்டு தங்களது கதைகளைச் சொல்லவும், திறமையை விட விடாமுயற்சி முக்கியம் என்பதையும் அவர்கள் உணர வேண்டும் என்பதே எனது நோக்கம். குழந்தைகளின் கைகளில் தூரிகையைக் கொடுக்கும்போது, அவர்களுக்கு ஒரு புதிய உலகத்தையே உருவாக்கும் சக்தியை நாம் வழங்குகிறோம் என்று நான் கருதுகிறேன்.

**ஒரு புகழ்பெற்ற மொடல் மற்றும் ஓவிய கலைஞர் ஆகிய இரண்டு துறைகளையும் நீங்கள் எவ்வாறு சமநிலைப்படுத்துகிறீர்கள்?**

மொடலிங் துறையை நான் “வாழும் கலை” (Living Art) என்று பார்க்கிறேன். அங்கே எனது உடல் ஒரு கன்வாஸ் (Canvas), ஓவியத்தில் காகிதம் எனது உலகம். இரண்டுமே ஒழுக்கம் மற்றும் வெளிப்பாட்டுத் தன்மையைக் கோருகின்றன. மொடலிங் துறையில் நான் பெற்ற தன்னம்பிக்கை, எனது ஓவியங்களில் துணிச்சலான வர்ணங்களாகப் பிரதிபலிக்கிறது. ஒன்று எனக்குப் புற அழகின் நுணுக்கங்களைக் கற்பிக்கிறது, மற்றது அகத்தின் ஆழத்தைப் படம்பிடிக்க உதவுகிறது. இந்த இரண்டும் இணைந்து என்னை ஒரு முழுமையான கலைஞராக மாற்றுகின்றன.

**நீங்கள் ஒரு செய்தி வாசிப்பாளர. உங்கள் ஊடகத்துறை அனுபவம் கலைப்பயணத்திற்கு எவ்வாறு உதவுகிறது?**

ஊடகத்துறை எனது தொடர்பாடல் திறனை மெருகேற்றியுள்ளது. ஒரு தொகுப்பாளராகப் பல்வேறு தரப்பட்ட மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது. இந்தத் தளம் சமூகத்தில் கலைக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், கலைஞர்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுத் தரவும் எனக்குப் பெரிதும் உதவுகிறது. கமெராவுக்கு முன்னால் நான் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், கன்வாஸில் நான் வைக்கும் வர்ணத்தைப் போலவே மிகக் கவனமாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)





BRIMELL
TOYOTA
எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் அனைத்து
தமிழ்க் கனேடியர்களுக்கும் BRIMELL TOYOTA
நிர்வாகத்தின் இனிய தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்
சார்பான வாழ்த்துக்கள்!
தமிழில் உரையாடி உங்கள் Toyota வாகனத்தை வாங்கிட
மன்சூர் நூர் அவர்களை அழையுங்கள்
Mansoor Noor
Brand Ambassador
C: 437-236-4128
T: 416-292-2241 x4105
Mansoor@brimelltoyota.com | www.brimelltoyota.com
5060 Sheppard Avenue East, Scarborough , M1S 4N3


Happy
Pongal
தமிழ் மரபும், புதிய தொடக்கத்தின் நம்பிக்கையும்
இணையும் தைத் திருநாளில், அனைவருக்கும்
GLOBAL FINANCIAL SERVICES
நிறுவனத்தின் இனிய தைத் திருநாள் வாழ்த்துக்கள்
GLOBAL
FINANCIAL SERVICES
ACCOUNTING AND IMMIGRATION SERVICES
"Large Enough To Fulfill Your Needs"
416-628-6331
A43-2900 MARKHAM ROAD, SCARBOROUGH, ON, M1X 1E6
globalfinancial79@gmail.com I www.gfscan.com


PRIVATE LENDERS -
FOR MORE FLEXIBLE
MORTGAGE OPTIONS
With the ever-changing market and a stricter mortgage stress test, many Canadians are finding it harder to qualify for a mortgage and are turning to alternative solutions. Private lenders are more flexible with required qualifications than traditional lenders. If you are looking to buy a home or refinance, a private mortgage is an option!*
Self-Employed
Purchasing
New To Canada
Refinancing
Investing In Real Estate
Consolidating Debt
... and more!
CONTACT ME TODAY FOR DETAILS
Tharsika Tharmakulasingam
Mortgage Agent Level 2
T: (647) 409-8059
ttharmakul@akal.ca
https://www.mortgagealliance.com/TharsikaTharmakulasingam
238 Britannia Road E, Mississauga, ON L4Z 1S6
AKAL
MORTGAGES
MORTGAGE ALLIANCE


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24






# Happy Thai Pongal and Tamil Heritage Month

## தை பொங்கல் மற்றும் தமிழ் மரபுத் திங்கள் வாழ்த்துக்கள்





Hon.
**TIM HODGSON**
Member of Parliament
Markham-Thornhill

Tim.Hodgson@parl.gc.ca
(905) 479-1269
@TimHodgson.MT
@timhodgson.mt
www.timhodgsonMP.ca


# OBITUARY

**Birth: 25-03-1942 Death: 01-01-2026**



## Mr. Felix Arulnayagam Christopher (Aras)

*Jaffna, Sri Lanka (Born), Sri Lanka, Toronto, Canada, Fairfield, USA, Rochester, USA, Annandale, USA*

Felix Arulnayagam (Aras) Christopher, beloved husband, father, engineer, and community leader, passed away peacefully on January 1, 2026 at the age of 83.

He was the son of Arulanandam Christopher and Annama Francispillai Christopher.

Born in Jaffna, Sri Lanka, Felix's life was marked by courage, generosity, and an unbreakable devotion to his family and community.

His remarkable journey took him from Sri Lanka to the UK, then to Canada, and finally to New Jersey, USA. He later lived in Rochester, NY and his final years were in Anandale, VA.

Along the way, Felix was instrumental in helping many family and friends to relocate from Sri Lanka to Canada and the US. Felix attended school in Colombo and graduated from St. Benedicts College. He later went to Technical College in Colombo.

A gifted engineer, Felix began his professional career with Bruel and Kjaer, where he spent 10 years refining his expertise in sound and vibration analysis.

Inspired by his passion and entrepreneurial spirit, he went on to establish West Caldwell Calibration Labs, a sound and vibration engineering company that grew into two branches with international reach, employing six dedicated professionals.

His pursuit of excellence and integrity earned him a stellar reputation in his field and the respect of his peers and clients around the world. Felix married Ranee Christopher on March 6, 1974. Beyond his professional success, Felix was a devoted husband to his wife, Ranee Christopher, and a loving father to his two children, Dawn and Neil.

His dedication and sacrifice for his family remain an enduring testament to the depth of his love.

Felix was also deeply involved in cultural and community life. As an active member and later, president in the 1990s of the NJ Tamil Sangam, he worked tirelessly to preserve and celebrate Tamil heritage while fostering a sense of unity among the New Jersey Tamil diaspora.

In 2010, Felix developed Parkinson's Disease, but this didn't slow him down. He continued to work until age 77. He was a devoted Grandpa who was there for all his grandkids' births. His joy was ever present when he played with Averie, Madison and Aiden.

He continued to travel and enjoy life, even traveling to Bali and Singapore last year. Felix's life was one of resilience, service, and compassion. He leaves behind a legacy of kindness, hard work, and faith- values that will continue to inspire everyone who knew him.

Felix A Christopher is preceded in death by Arulanandam Christopher, Annama Francispillai, Stanley E Christopher, Julia A Christopher. Felix A Christopher is survived by Ranee Christopher, Dawn Christopher, Neil Christopher, Lisa Christopher, Alex Christopher, Raji Gunaratnam, Jerry Christopher, Averie Christopher, Madison Christopher, Aiden Christopher.

He will be profoundly missed and lovingly remembered by his wife Ranee, his children Dawn and Neil, daughter in law Lisa and grandchildren Averie, Madison and Aiden, his extended family, and friends.



May his soul rest in eternal peace in heaven. He will be missed forever.
Informed by: Family

**Viewing:** Friday, 16 January 2026 - 5:00PM to 8:00PM
Jerrett Funeral Homes - Scarborough Chapel
660 Kennedy Road, Toronto, ON M1K 2B5, Canada

**Mass:** Saturday, 17 January 2026 - 11:00AM
Saint Maria Goretti Parish
717 Kennedy Road, Scarborough, ON M1K 3N8, Canada

**Funeral Service:** Saturday, 14 February 2026 - 11:00AM
National Funeral Home | National Memorial Park
7482 Lee Hwy, Falls Church, VA 22042, United States

**Burial:** Saturday, 14 February 2026 - 12:00PM
National Funeral Home | National Memorial Park
7482 Lee Hwy, Falls Church, VA 22042, United States

**CONTACT:** Ranee Christopher (Wife): +1(585) 315-2577 | Dawn Christopher (Son): +1(347) 216-3495 | Neil Christopher (Son): +1(718) 710-7458

# அதிகாரிகளின் அலட்சியப் போக்கே இதற்குக் காரணம் என்று சிறையில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் இறந்த ஒருவரின் குடும்பத்தினர்குற்றம் சாட்டியுள்ளனர்

"அவரை வேறு வைத்தியசாலைக்கு மாற்றியிருந்தால் காப்பாற்றியிருக்கலாம். அங்கு அவருக்கு முறையான சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கலாம். இது உண்மையில் வைத்தியர்கள் மற்றும் சிறைச்சாலையின் அலட்சியமாகும். இது அராஜகம். இதில் யார் குற்றவாளிகள் என எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்களால் உயிரைக் கொடுக்க முடியுமா? அந்த பிள்ளைக்கு ஒரு தந்தையைக் கொடுக்க முடியுமா? இழந்த கணவனை அவரது மனைவிக்குக் கொடுக்க முடியுமா?"

நீதிமன்ற உத்தரவின் பேரில் வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சபாரத்தினம் நகுலேஸ்வரனின் உறவினர்கள், சிறை அதிகாரிகள் மற்றும் வைத்தியர்களின் பொறுப்பற்ற செயல்களே அவரது மரணத்திற்குக் காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளதாகக் கூறுகின்றனர்.

வலது காலில் கருப்பு நிறத்தில் காயம் காணப்பட்டதாக, நீதவான் ஆர்.ஜி. பியதாசவுக்கு அனுப்பிய மரண பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மேலதிக விசேட சட்ட வைத்திய அதிகாரி, சதாசிவம் ரவீந்திரன், "சிறைச்சாலை வைத்தியசாலையில் உடனடி மற்றும் சரியான பராமரிப்பு வழங்கப்படவில்லை என அவரது உறவினர்கள் முறையிடுவதாக கூறுகின்றனர்" எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஒரு வழக்கு தொடர்பாக அவருக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டதால், 59 வயதான சபாரத்தினம் நகுலேஸ்வரன், டிசம்பர் 10, 2025 அன்று குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார்.

டிசம்பர் 11, 2025 அன்று அவர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது நீதிபதி அவரை ஜனவரி 9, 2026 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.




நீரிழிவு நோயாளியான சபாரத்தினம் நகுலேஸ்வரன், காவலில் வைக்கப்பட்ட நாளிலிருந்து டிசம்பர் 20 வரை ஒவ்வொரு நாளும் குடும்ப உறுப்பினர்கள் அவரை சிறைக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

டிசம்பர் 26 அன்று அவரை சந்திக்க சிறைக்குச் சென்றபோது, சபாரத்தினம் நகுலேஸ்வரன் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததோடு அவரது கால்களில் காயங்கள் காணப்பட்டதாக அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

நீரிழிவு நோயாளியான தங்கள் உறவினர் வைத்திய ஆலோசனைக்கு அமைய தொடர்ந்து பாதணியை (சப்பாத்து) அணிந்திருந்தார் எனவும், சிறையில் அடைக்கப்பட்ட பின்னர், அவருக்கு இறப்பர் செருப்புகள் வழங்கப்பட்டதாகவும், அது அவரது காலில் காயங்களை ஏற்படுத்தியதாகவும், அதன் விளைவாக அவர் இறந்திருக்கலாம் எனவும் உறவினர்கள் மேலும் தெரிவித்தனர்.

கடந்த வருடம் டிசம்பர் 27-29 இடைப்பட்ட ஒரு நாளில், சபாரத்தினம் நகுலேஸ்வரன் இறந்ததாக சிறை அதிகாரிகள் குடும்பத்தினருக்குத் தெரிவித்துள்ளதோடுடு குடும்பத்தினர் டிசம்பர் 30, 2025 அன்று உடலைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

சபாரத்தினம் நகுலேஸ்வரனின் குடும்ப உறவினர் ஒருவர், அவரது உறவினரின் மரணம் சந்தேகத்திற்குரியதாக இருந்ததால், பொறளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டதாகக் கூறினார்.

"அவரை வேறு வைத்தியசாலைக்கு மாற்றியிருந்தால் காப்பாற்றியிருக்கலாம். அங்கு அவருக்கு முறையான சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கலாம். இது உண்மையில் வைத்தியர்கள் மற்றும் சிறைச்சாலையின் அலட்சியமாகும். இது அராஜகம். இதில் யார் குற்றவாளிகள் என எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்களால் உயிரைக் கொடுக்க முடியுமா? அந்த பிள்ளைக்கு ஒரு தந்தையைக் கொடுக்க முடியுமா? அவர் இழந்த கணவனை அவர் தனது மனைவிக்குக் கொடுக்க முடியுமா?"

சபாரத்தினம் நகுலேஸ்வரனின் இறுதிச் சடங்குகள் டிசம்பர் 30, 2025 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.

(11 பக்கம் தொடர்ச்சி)

## "வறுமை ஒரு கலைஞனுக்கு ஒரு தடையல்ல. அது, அவனுக்குள் இருக்கும் படைப்பாற்றலைத் தட்டி எழுப்பும் ஒரு கருவி என்றே நான் ஆழமாக நம்புகிறேன்"

**யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓவியத்துறை பட்டதாரி ஆசிரியரான கீர்த்திகா பாபு அவர்களோடு ஒரு சந்திப்பு**

**அடுத்த ஐந்து ஆண்டுகளில் உங்களது கலை அகாடமியை எங்கே காண விரும்புகிறீர்கள்?**

அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த அகாடமியை எமது பிராந்தியத்தின் சிறந்த கலை மையமாக மாற்ற வேண்டும் என்பதே எனது இலக்கு. மாணவர்கள் வரைந்த ஓவியங்களைக் கண்காட்சிக்கு வைக்க வேண்டும். அத்துடன், வசதி குறைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி, வறுமையின் காரணமாக எந்தவொரு குழந்தையும் கலையைக் கைவிடக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவேன். எதிர்காலத்தில் ஒரு நடமாடும் கலைக்கூடத்தை உருவாக்கி, கிராமப்புறங்களில் இருக்கும் திறமைகளை உலகிற்கு அடையாளம் காட்ட வேண்டும் என்ற பெருங்கனவும் என்னிடம் உள்ளது.

**இத்தனை சாதனைகளுக்குப் பிறகு, இன்று வெற்றியை நீங்கள் எவ்வாறு வரையறுக்கிறீர்கள்?**

வெற்றி என்பது புகழோ அல்லது ஓவியங்கள் விற்பனையாவதோ அல்ல. ஓவியம் கற்கும் எனது மாணவன் தனது முதல் ஓவியத்தை முடிக்கும்போது அவன் கண்களில் தெரியும் அந்தத் தன்னம்பிக்கையே எனக்கு வெற்றி. எனக்குப் பிடித்த விடயத்தைச் செய்துகொண்டே எனது குடும்பத்தைப் பராமரிக்க முடிவதும், எனது போராட்டங்கள் மற்றவர்கள் முன்னேறுவதற்கு ஒரு ஏணியாக இருப்பதையுமே நான் வெற்றியாகக் கருதுகிறேன். யாரோ ஒரு சிறுமி எனது கதையைக் கேட்டுவிட்டுத் தானும் ஒரு கலைஞராக வருவேன் என்று சொல்லும் அந்த ஒரு கணமே நான் அடைந்த மிகப்பெரிய வெற்றியாகும்.

**உங்களது பயணம் நிதி நெருக்கடிகள் நிறைந்தது. இவ்வாறானதொரு சூழலில், உங்கள் கலை ஆர்வத்திற்கும் வளர்ச்சிக்கும் உங்கள் பெற்றோர்கள் எவ்வாறு ஆதரவளித்தார்கள்?**

எனது வெற்றியின் அஸ்திவாரம் எனது பெற்றோர்களே. வறுமை எங்களை வாட்டிய போதும், ஒரு "நிலையான" வேலைக்காக எனது கலை ஆர்வத்தை கைவிடுமாறு அவர்கள் ஒருபோதும் என்னிடம் கூறியதில்லை. எனது தாய் தான் எனது முதல் ரசிகை நள்ளிரவு வரை நான் ஓவியம் வரையும்போது அவர் கூறும் ஊக்கமளிக்கும் வார்த்தைகள், எந்த விலையுயர்ந்த கருவியை விடவும் எனக்குப் பெறுமதியானவை. யாழ் பல்கலைக்கழகத்தில் நான் பட்டமளிப்பு அங்கியை அணிய வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களது சொந்த சுகபோகங்களைத் தியாகம் செய்தார்கள். எனது திறமை மீது அவர்கள் வைத்த அசைக்க முடியாத நம்பிக்கைதான், எனது கனவுகளை நிஜமாக்கும் தைரியத்தை எனக்கு வழங்கியது. இன்று நான் அடையும் ஒவ்வொரு வெற்றியும் எனது பெற்றோர்களேளின் மௌனமான தியாகங்களுக்குச் செய்யும் சமர்ப்பணமாகும்.

**கலை மற்றும் சமூகத்திற்கான உங்கள் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது. உங்கள் கலைத்திறன் மற்றும் சமூக தலைமைத்துவத்திற்காக நீங்கள் பெற்ற விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் பற்றிப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

விருதுகள் என்பது எனக்கு வெறும் ஞாபகச் சின்னங்கள் மட்டுமல்ல அவை நான் கடந்து வந்த போராட்டங்களுக்கான அங்கீகாரமாகும். எனது எண்ணெய் வர்ண ஓவியங்கள் மற்றும் சுவர் ஓவியங்களுக்காகப் பிரதேச மற்றும் தேசிய மட்டத்திலான பல விருதுகளை நான் வென்றுள்ளேன். குறிப்பாக, "இளம் சாதனையாளர்" (Young Achiever) அங்கீகாரமும், "சமூக தலைமைத்துவத்திற்காக" (Community Leadership) நான் பெற்ற விருதுகளும் எனக்கு மிகுந்த நெகிழ்ச்சியைத் தந்தன. இந்த விருதுகள் எனக்கு மட்டுமல்ல, எனது பெற்றோருக்கும் யாழ் மண்ணிற்கும் உரித்தானவை. ஒவ்வொரு விருதும், கடின உழைப்பு ஒருபோதும் வீண் போகாது என்பதை எனக்கு நினைவூட்டுகின்றன. பட்டங்களை விடவும், பெரிய தளங்களில் எனது கலை ஊடாக எனது மக்களின் இருப்பை பிரதிபலிக்கும் வாய்ப்பு கிடைப்பதையே நான் மிகப்பெரிய அங்கீகாரமாகக் கருதுகிறேன் என்றார்.





இறுதியில் தனது எண்ணங்களை பல வாசகர் தளங்களுக்கு எடுத்துச் செல்ல முயலும் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கும் நன்றியை பகிர்ந்து கொண்டார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உறவுகளை அஞ்சலிப்பதற்கு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை இராணுவத்திடமிருந்து விடுவிக்க வேண்டும் என்கிறார் வலி வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல காணி இராணுவத்திற்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் பிரதேச அபிவிருத்திக் குழுவில் காட்சிப்படுத்தப்பட்ட நிலையில், இராணுவம் அங்கு முகாமிட்டிருப்பது உரிமை மீறலாகும். உறவுகள் அஞ்சலிப்பதற்கான உரிமையினை உறுதிப்படுத்தும் வகையில் அக் காணியினை விடுவிக்க அபிவிருத்திக் குழுவில் தீர்மானம் உடன் நிறைவேற்றப்பட வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் வலியுறுத்தினார்.

இராணுவத்தினரால் விடுவிக்கப்படவேண்டிய காணிகள் விடயத்தில், 19.42 ஏக்கர் நிலம் உரிமையாளர் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு - சுவிகரிப்பு தொடர்பான தற்போதைய நிலை அரச காணி (03.09.2014) இராணுவத்தினருக்குக் கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என செவ்வாய்க்கிழமை (13) இடம்பெற்ற கோப்பாய் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்து இவ்விடயத்தில் குறுக்கிட்டு பேசிய வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ், மாவீரர் துயிலும் இல்ல காணி இராணுவத்தினருக்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்ற தகவலை நாம் புதிதாக தற்போதே கேள்விப்படுகின்றோம். அது முன்னைய காலங்களில் இடம்பெற்றதாக தங்களால் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த இரகசிய தகவலை நாம் அறியும் நிலையில், நாம் அதனை கடுமையாக எதிர்க்கின்றோம். துயிலும் இல்லத்தில் எமது உறவுகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு மரணித்தவர்களை நினைவு கொள்ளும் உரிமை, அஞ்சலிக்கும் உரிமை எமது உறவுகளுக்கு கிட்டவேண்டும்.

இதற்கு பதிலளித்த அபிவிருத்திக் குழுவின் தலைவர் ரஜிவன் எம்.பி, இது 2014 ஆம் ஆண்டு இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றார். இதனையடுத்து குறுக்கிட்ட தவிசாளர் 2014 ஆம் ஆண்டு எந்த அடிப்படையில் கையளிக்கப்பட்டிருக்கின்றது? காணி கையளிப்பு சட்டங்கள் எவ்வாறு பின்பற்றப்பட்டன? எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த அபிவிருத்திக்குழுவின் தலைவர் ரஜிவன் எம்.பி, மாவீரர் துயிலும் இல்ல நிலங்களை அரசாங்கம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என்றார். அது நடக்கும் என்றார். இராணுவம் இருக்கின்ற பெருமளவான காணிகள் விடுவிக்கப்படும் என்றார். தையிட்டி விகாரை கூட அவ்வாறு தான் என பதிலளித்தார். இதனை ஏற்றுக் கொள்ளாத தவிசாளர், இக் கூட்டத்தில் ஏன் இதில் இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாக தகவல் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான கருமங்கள் எதுவும் காணி பயண்பாட்டுக்குழு ஊடாக நடந்துள்ளதா என தவிசாளர் துருவித் துருவி வினா தொடுத்தார்.

இதற்கு பதிலளித்த பிரதேச செயலாளர் அது விடுவிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் என்றார். காணி உத்தியோகத்தர் பதிலளிக்கையில் சிறைச்சாலை திணைக்களத்திற்குச் சொந்தமான காணி அது 2014 இல் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கப்பட்டது என்றார்.



மீண்டும் தவிசாளர், இது எந்தத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட காணியாகவும் இருக்கலாம். இக் காணியில் இருப்பது ஆயிரக்கணக்கானவர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன. இங்கு நினைவு கூர்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும். அடிப்படையில் மயானங்கள் உள்ளராட்சி மன்றங்களுக்கு பாரதீனப்படுத்தப்படவேண்டும். சட்ட ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களே அக் காணிகளை நிர்வகிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அபிவிருத்திக்குழுவின் தலைவர் ரஜிவன் எம்.பி, இவ்விடயம் பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடையது என்றார்.

இதற்கு பதிலளித்த தவிசாளர் இங்கு உத்தியோகத்தர்களால் வெளியிடப்படும் தகவல்களின் அடிப்படையில் துயிலும் இல்ல காணி தொடர்பில் பல மாற்றங்கள் வெளித்தெரியாது நடந்துள்ளன. நீங்கள் அரசாங்கத்தின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் - அபிவிருத்திக் குழுத்தலைவர் எனவே அரசாங்கம் என்று வேறு ஒரு சக்தி இருப்பதாக நாம் கூறக்கூடாது. அரசாங்க முடிவில் நீங்கள் செல்வாக்குச் செலுத்த வேண்டும். விரைவில் துயிலும் இல்லங்கள் விடுவிக்கப்படவேண்டும். அதற்கு வசதியாக அபிவிருத்திக்கழுக்களில் தீர்மானம் எடுங்கள் என்றார்.

இவ் அபிவிருத்திக்குழு தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பது பாதுகாப்பானது. இக் காணி திணைக்களம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதால் அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அபிவிருத்திக்குழுவின் தலைவர் பதிலளித்தார். அதற்கு கேள்வி தொடுத்த தவிசாளர் நீங்கள் உறுதியாக கூறாது சமாளித்த கூறுகின்றீர்கள். ஆகவே இக் காணி சிறைச்சாலைத் திணைக்களத்திடம் இருந்து பிரதேச செயலகத்திற்கு விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று நீங்கள் உத்தரவாதமளிப்பதை பதிவு செய்யுங்கள் என கூறினார்.

20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
Cr551, Cr650, #5799, Cr166,Cr671, Cr163, Cr277, Cr594, Cr608, Cr585, Cr588, #1955,#1386,Cr582, Cr663, Cr554, #5718

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca
4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

# இலங்கைக் கல்வி அமைச்சிலும் “ஓர்” இனப் பிரச்சினை




***“கல்வி அமைச்சரான ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க முடியாதென எதிர்கட்சிகளை சேர்ந்த தமிழரசுக்கட்சி பகிரங்கமாக அறிவித்துள்ளது. அதேபோன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசிய ஜனநாயகக்கூட்டணி போன்றவையும் ஆதரிக்காது என்றே தெரிகின்றது. அதேவேளை என்னதான் உள்வீட்டுக் கலகங்கள். குழிபறிப்புகள் இருந்தாலும் அரசு என்ற வகையில் ஹரிணிக்கு எதிரான எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஜே.வி.பி. - தேசியமக்கள் சக்தி அரசு இணைந்து தோற்கடிக்கும். எனவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்துள்ளதன் மூலம் பிரதான எதிர்க்கட்சி மீண்டும் ஒரு தடவை மூக்குடைபடப் போகின்றது.”***

**- கே.பாலா -**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தி அரசின் ஆட்சி குழப்பம், குளறுபடிகள். குத்து வெட்டுக்கள். உள் வீட்டுக் கலகங்கள், பிரதமர் பதவிக்கான குழிபறிப்புக்கள் என “நித்தம் கண்டம்...பூரண ஆயுள்” என்றவாறாக நகர்ந்து கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க பெற்ற வெற்றியின் மூலம் பாராளுமன்றத்தேர்தலில் 159 ஆசனங்கள் என்ற வரலாற்று வெற்றியுடன் தேசிய மக்கள் சக்தி அரசு அரியணை ஏறிய நாள் முதல் கலாநிதிப் பட்டம், அரிசி, தேங்காய், குரங்கு, உப்பு, பாதாள உலகம், படு கொலைகள், சர்வாதிகாரம், இந்திய பிரதமரின் வருகை, ஜனாதிபதியின் இந்திய, சீன விஜயங்கள், சிறைக்கைதிகளுக்கான ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வாக்கு வீழ்ச்சி, வடக்கு காணி சுவீகரிப்பு, சட்டவிரோத கொள்கலன்கள் விடுவிப்பு, திருகோணமலை புத்தர்சிலை, சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரை, டித்வா புயல் பேரழிவுகள், அதற்கான நிவாரண அறிவிப்புகள் என பல சர்ச்சைகளில் சிக்கி சின்னா பின்னமாகிக் கொண்டிருக்கின்றது.

இது போதாதென்று தற்போதைய அரசு மேற்கொள்ளவுள்ள கல்வி மறு சீரமைப்பு எதிர்க்கட்சிகளின், பிரபல பிக்குகளின் கடும் விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் உள்ளான நிலையில் 6 ஆம் தர ஆங்கில பாடப் புத்தக மாதிரியில் ஏற்பட்டுள்ள அல்லது திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள பாரிய தவறு ஒன்று அரசை மட்டுமன்றி கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியவின் பதவிக்கும் பெயருக்கும் பெரும் களங்கத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது. அதன் விளைவாக தற்போது பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரவுள்ளதுடன் கல்வி அமைச்சர் அரச எதிர்ப்பு சமூக வலைத்தளங்களினால் கடுமையாகவும் இழிவாகவும் விமர்சிக்கப்பட்டு வருகின்றார்.

தரம் 6 ஆங்கில பாடநூல் அச்சிடுதலில் ஏற்பட்ட ஒரு “பாரிய தவறு” மிகவும் மலிவான சந்தர்ப்பவாத அரசியலுக்கான வாசலைத் திறந்துவிட்டுள்ளது. சந்தர்ப்பவாத அரசியலில் இலாபம் தேட முயல்பவர்களுக்கு, இந்தத் தவறு வெறும் ஒரு நிர்வாகச் சீர்கேடு மட்டுமல்ல. அது ஆட்சி மாற்றத்துக்கான ஆசையைத் தூண்டி விடும் ஓர் ஆயுதமாகவும் அரசு பக்கத்தில் பிரதமர் பதவி ஆசையில் இருப்போருக்கு பழம் நழுவி பாலில் வீழ்ந்தது போன்றும் மாறியுள்ளது. பாராளுமன்றத்திலும் சமூக ஊடகங்களிலும் பிரதமரான கல்வி அமைச்சர் இராஜிநாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் எதிரொலிக்கின்றன. ஹரிணி அமரசூரிய மிகக் கேவலமாக விமர்சிக்கப்படுகின்றார். அவரின் தனிப்பட்ட வாழ்க்கை கூட பொது வெளியில் விவாதிக்கப்படுகின்றது.




கல்வி அமைச்சரான ஹரிணியை மையமாகக் கொண்டு எழுந்திருக்கும் சர்ச்சை, தரம் 6 ஆங்கில பாடநூலில் மாணவர்கள் கலந்துரையாடும் பாடக்குறிப்பு ஒன்றில் அச்சிடப்படுள்ள இணையத்தள “முகவரி” குறித்ததாகவே உள்ளது. அந்த இணையத்தள முகவரி ஓரின சேர்க்கையாளர்களின் அந்தரங்க, ஆபாச இணையத்தள முகவரியாகும். அநுரகுமார அரசிலும் ஆட்சியிலும் இருக்கும் முக்கியமான ஆண்கள், பெண்கள் சிலர் “ஓரின சேர்க்கையாளர்கள்” என்ற குற்றச் சாட்டுகளுக்குள்ளாகியுள்ளதுடன், பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணியும் ஒரு “லெஸ்பியனாக” அதாவது ஓரினசேர்க்கையாளராக விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில்தான் அந்த கலாசாரத்தை இலங்கையில் போஷித்து வளர்க்கும் உள்நோக்கத்துடன் தரம் 6 ஆங்கில பாடநூலில் அந்த “முகவரி” திட்டமிட்டு புகுத்தப்பட்டுள்ளது என்பதே குற்றச்சாட்டாகவுள்ளது.

தான் ஒரு லெஸ்பியன் என ஹரிணி எந்த இடத்திலும் பகிரங்கமாக கூறியிருக்கவில்லை. அவரை நெருக்கமாக அறிந்து வைத்திருப்பவர்கள் பலரும் “அவர் அப்படியானவர் அல்ல” என்று அடியோடு மறுக்கின்றார்கள். அவருடைய அந்தரங்க வாழ்க்கையில் அவர் அப்படி நடந்து கொண்டாலும் கூட - பிரதமர் பதவிக்குள்ள அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து, மக்கள் வரிப் பணத்தை பயன்படுத்தி அல்லது வலுக்கட்டாயமாக யாரையும் அதில் ஈடுபடுத்தி தனது பாலியல் இச்சைகளை அவர் நிறைவேற்றிக் கொள்ளாத வரையில் அது நாட்டு மக்களுக்கு ஒரு பிரச்சினையாக இருந்து விட முடியாது.

சம்பந்தப்பட்ட பாடநூல் தொடர்பாக “அந்தத் தவறுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தவறு செய்தவர்கள் உரிய விதத்தில் தண்டிக்கப்படுவார்கள்” எனக் ஹரிணி திட்டவட்டமாக கூறிய பின்னரும் கூட, எதிர்க்கட்சி தரப்புகள் ஒரு சில பிரபல பிக்குகள், சில அரச எதிர்ப்பு யூடியூபர்களும் அதை மேலும் மேலும் கிளறிக் கொண்டிருக்கிறார்கள். எளிதில் மக்களின் உணர்வுகளை தூண்டக்கூடிய ஒரு தலைப்பு தொடர்பான விவாதமும், உரையாடலும் பிழையான நபர்களின் கைகளுக்கு போனால் என்ன நடக்கும் என்பதற்கு தற்போது பிரதமர் ஹரிணி தொடர்பான இந்த “முகவரி சர்ச்சை” சிறந்த உதாரணமாகவுள்ளது.

பிரதமர் ஹரிணி மீது நடந்து வரும் தனிநபர் தாக்குதலை எதிர்த்து பெண்ணியவாதிகள் பெரியளவில் குரல் கொடுக்கவில்லை. அப்படிகொடுத்தால் தம்மையும் ஹரிணியுடன் இணைத்து விடுவார்களோ என்ற அச்சமும் இதற்கு ஒரு காரணமாகவுள்ளது. அரசாங்கத்தின் மீதான வன்மத்தை கொட்டித் தீர்ப்பதற்கான ஒரு அரிய சந்தர்ப்பமாக இது எதிர்க்கட்சிகளுக்கு வாய்த்திருப்பதால் எதிர்க்கட்சிகள் மிகவும் தந்திரமான விதத்தில் தமது பினாமிகளை களமிறக்கி, இந்த சேறுபூசலை, கீழ்த்தரமான விமர்சனங்களை, குற்றச்சாட்டுக்களை முன்னெடுத்து வருகின்றன. சமூக ஊடகங்களில் ஹரிணிக்கு எதிராக பல பெண் புத்திஜீவிகளும் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள்.

பெண் என்ற ரீதியில் தற்போது கீழ்த்தரமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டும் விமர்சிக்கப்பட்டும் பதவி விலக வலியுறுத்தப்படும் பிரதமரும் கல்வி, உயர்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய ஒன்றும் சாதாரணமானவரல்ல. அவர் அரசியல் குடும்பத்திலிருந்து செல்வாக்கினால் பதவிகளுக்கு வந்தவருமல்ல. 6 மார்ச் 1970 இல் பிறந்த ஹரிணி அமரசூரிய இலங்கை கல்வியாளரும், மனித உரிமைச் செயற்பாட்டாளரும், பல்கலைக்கழக விரிவுரையாளருமாவார். டில்லிப் பல்கலைக் கழகத்தின் டில்லி, இந்துக் கல்லூரியில் உயர்கல்வி கற்று சமூகவியலில் இளங்கலைப் பட்டமும், அவுஸ்திரேலியாவின் மக்குவாரி பல்கலைக்கழகத்தில் பயன்பாட்டு மானிடவியலில் முதுகலைப் பட்டமும், எடின்பரோ பல்கலைக்கழகத்தில் சமூக மானிடவியலில் கலாநிதி பட்டமும் பெற்றவர்.

இளைஞர்கள், அரசியல், கருத்து வேறுபாடு, செயல்பாடு, பாலினம், வளர்ச்சி, சமூக உறவுகள், குழந்தைகள் பாதுகாப்பு, உலகமயமாக்கல், மேம்பாடு ஆகிய துறைகளில் பல ஆய்வு நூல்களை வெளியிட்டவர். பல ஆண்டுகள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளவியல் பயிற்சியாளராகப் பணியாற்றிய பின்னர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் மூத்த விரிவுரையாளராக இணைந்து கொண்டவர். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் கூட்டமைப்பில் உறுப்பினராகி, இலவசக் கல்விக்காகப் போராட்டங்களில் கலந்துகொண்டவர். பாலின சமத்துவம், LGBTQ+ உரிமைகள், ஆகியவற்றிற்காக வாதிட்டவர்.

இவர் கருத்தியல் ரீதியாக மைய - இடதுசாரியாகவும், தாராளவாதியாகவும் இருந்தார். இவர் இளைஞர்களின் வேலையின்மை, பாலின சமத்துவமின்மை, சிறுவர் பாதுகாப்பு, இலங்கை கல்வி முறையின் திறமையின்மை ஆகியவை பற்றிய தனது ஆய்வுகளுக்காக நன்கு அறியப்பட்டவர், பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறையை நாம் அகற்ற வேண்டும். கல்வி மிகவும் அனுபவபூர்வமாக இருக்க வேண்டும். நமது கல்வி நிறுவனங்களின் கலாசாரம் மாற வேண்டும். பாலினம், மதம் அல்லது மொழி அடிப்படையில் பிரிந்த நிறுவனங்கள் நம்மிடம் இருக்க வேண்டாம். மாறாக அங்கெல்லாம் பன்முகத்தன்மையை ஊக்குவிக்க வேண்டும். மாணவர்கள் தங்கள் கல்விப் பாதைகள் மற்றும் தொழிலைத் தீர்மானிப்பதில் அதிக தேர்வு மற்றும் நெகிழ்வுத்தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். கல்விக்கு அரசு முதன்மையாக பொறுப்பேற்க வேண்டும் என்பது போன்ற முற்போக்குச் சிந்தனைகள் கொண்டவர்.

தேசிய மக்கள் சக்தி உறுப்பினரான ஹரிணி, 2020 ஆம் ஆண்டுமுதல் முதல் தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ஹரிணி அமரசூரிய 655,289 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார். இந்த வாக்கு எண்ணிக்கை இலங்கையின் தேர்தல் வரலாற்றில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெற்றுக்கொண்ட அதிகூடிய வாக்கு எண்ணிக்கையாகும். இதற்கு முன்னர் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வரலாற்றில் இடம்பிடித்திருந்தார். 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அவர் 527,364 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். இந்த எண்ணிக்கையை ஹரிணி அமரசூரிய முறியடித்து இலங்கை அரசியலில் புதிய அத்தியாயத்தை எழுதியவர். சிறிமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஆகியோருக்குப் பின்னர் இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றவர்.

*(தொடர்ச்சி 18 பக்கம்)*

# "பொங்கல் பண்டிகையானது தமிழர்களின் பண்பாட்டு விழாவாக மாத்திரமல்ல, அவர்களின் வாழ்வியலின் அடிப்படையாகவும், உழைப்பிற்கும் வலுவூட்டலுக்களுக்கும் உரிய அடையாளமாகவும் திகழ்கின்றது!"

## அனைத்துலகத் தமிழர் பேரவையின் தலைவரின் பொங்கல் விழாச் செய்தி!

அனைத்துலகத் தமிழர் பேரவை
FEDERATION OF GLOBAL TAMILS

உழைப்பினால் தேசத்தை வலுப்படுத்துவதே தமிழர் திருநாளான பொங்கலின் மையப் பண்பாடாகும். தமிழர்களின் பண்பாடு என்பது வாழ்வியலின் அடிப்படை மட்டுமன்றி, உழைப்பையும் வலுவூட்டலையும் அடையாளப்படுத்தும் ஆதாரமாகவும் திகழ்கிறது என்பதற்கு பொங்கல் பண்டிகை தக்க சான்றாக அமைகிறது.

இவ்வாறு தனது பொங்கல் விழாச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார், அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் கனடா வாழ் திரு. நிமால் விநாயகமூர்த்தி. எதிர்வரும் ஜனவரி 24, 2026 அன்று ஐக்கிய இராச்சியதில் (UK), பொங்கல் விழாவை முன்னிட்டு அவர் இந்த செய்தியை வெளியிட்டுள்ளார்.



மேற்படி வாழ்த்துச் செய்தியில் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"தமிழ் மக்களின் பண்பாட்டுப் பண்டிகைகளில் ஒன்றான பொங்கல், பண்டைய காலம் தொட்டு எமது மரபோடும் வரலாறோடும் கலந்த அற்புதமான விழாவாகும். இயற்கையை வழிபடும், விலங்குகளின் மீது காருண்யத்தை வெளிப்படுத்தும், உழைப்பை உயர்வாக மதிக்கும் தைப்பொங்கல், தமிழர்களின் சிறந்த பண்பாட்டுச் சின்னமாகவும் அறிவு வெளிப்பாடாகவும் விளங்குகிறது.

தமிழர்களின் தொன்மையான வாழ்வியலிலிருந்து இன்றுவரை முக்கிய பொருளாதார ஆதாரமாக விளங்கும் நெல் உற்பத்தி மற்றும் விவசாயத்தின் முக்கியத்துவத்தையும் அதன் இயக்கத்தையும் தைப்பொங்கல் தெளிவாக உணர்த்துகிறது. இதன் வழியாக தமிழர்கள் பொருளாதார முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்ற பெரும் செய்தி தைப்பொங்கலில் வலியுறுத்தப்படுகிறது.

இன்றைய உலகம் பாரிய மாற்றங்களையும் சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றபோதும், தமிழர் தேசத்தின் அடிப்படை பொருளாதார உழைப்பாகவும் பண்பாடாகவும் நெற்செய்கை தொடர்ந்து நிலைத்திருக்கிறது. கடந்த காலத்தில் எமது மக்கள் சந்தித்த கடும் அவலங்களுக்குப் பின்னரும், பொருளாதார ரீதியாக மீண்டெழுவதற்கான உயிர்மூச்சாக எமது மண்ணும், மண்ணை நம்பிய விவசாயமும் இருந்து வருகின்றன.

உலகம் தழுவிய வாழ்வை ஈழத் தமிழர்கள் வரித்துக்கொண்டுள்ள இன்றைய சூழலில், தமிழர் பொங்கல் ஒரு உலகளாவிய பண்டிகையாகப் பரிமாணம் பெற்றுள்ளது. இது எமது உழைப்பின் அடையாளமாக மட்டுமல்லாது, போராட்ட வாழ்வின் ஒரு கூறாகவும் மாறியுள்ளது. கனடா போன்ற நாடுகள் தமிழ் மரபுத் திங்களை அங்கீகரித்துள்ளமை, தமிழர் பண்பாட்டின் வலிமையும் அது நாடு கடந்து நிலைபெற்றிருப்பதையும் உணர்த்துகிறது.

இந்தப் பண்டிகை வழியாக உழைப்பின் உன்னதத்தை உணரும் நாம், இன்றைய உலகமயமாக்கல் சூழலில் தொழிநுட்ப அறிவையும் புதிய சிந்தனைகளையும் உள்வாங்கி, தேசத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, தன்னிறைவான தாயகத்தை தலைநிமிரச் செய்வது எம் அனைவரின் கடமையாகும். இதுவே நிலத்திலிருந்து பலம் பெறும் எமது உறவுகளை ஒன்றிணைக்கும் வலுவான பிணைப்பாகும்.

மேலும் இந்த ஆண்டு அனைத்துலகத் தமிழர் பேரவை ஐக்கிய இராச்சியதில் (UK), பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடுவதுடன், ஈழத் தமிழர்கள் பலநாடுகளிருந்தும் ஒன்றுகூடி அனைத்துலக தமிழர் பேரவையின் யாப்பை (Constitution) ஜனவரி 24, 2026 அன்று முறையாக வெளியிடுகிறோம். இந்த யாப்பு ஒரு ஆவணம் மட்டும் அல்ல. அது உலகத் தமிழர்களின் ஒற்றுமையின் உறுதி. நீதி, ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகிய மதிப்புகளின் எழுத்துப்பூர்வ உறுதிமொழி.




அன்பான உறவுகளே, இயற்கையை நட்பாகக் கொள்வதே ஈழ தேசத்தின் மேன்மையின் அடையாளம். நாட்டில் ஏற்பட்ட போரினால் பல இன்னல்களைச் சந்தித்துள்ள எமது மக்கள் நம்பிக்கையுடன் மீண்டெழவும், நீதி மற்றும் விடுதலையை அடையவும், இந்த நாள் புதிய நம்பிக்கையையும் புதிய விடியலையும் வழங்க வேண்டி, இயற்கை எனும் இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்".

(17 பக்கத் தொடர்ச்சி)

## இலங்கைக் கல்வி அமைச்சிலும் "ஓர்" இனப் பிரச்சினை

இவ்வாறான ஒரு பலமான கல்விப் பின்புலத்தையும் தூர நோக்கு சிந்தனைகளையும் கொண்ட ஹரிணியை, தேசிய கல்வி நிறுவகத்தின் அச்சுப் பிழைக்காக இராஜிநாமா செய்ய எதிர்க்கட்சிகள் கோருவது, நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது மலிந்த சந்தர்ப்பவாத அரசியல். ஒரு கட்டமைப்பு ரீதியான நிர்வாகப் பிரச்சினைக்கு ஒரு தனி நபரைப் பலி எடுக்க முயற்சிக்கின்றனர் ஹரிணி அமரசூரிய கல்வியை மறு சீரமைக்க முயன்றதுதான் இந்தளவு குற்றச்சாட்டுக்களுக்கும் கீழ்த்தரமான எதிர்க்கட்சிகளின், பிக்குகளின் விமர்சனங்களுக்கும் காரணம். மாணவர்கள் எதைக் கற்கிறார்கள், அவர்களை பரீட்சை மையக் கலாசாரத்திலிருந்து திறன் சார்ந்த கலாசாரத்திற்கு மாற்றுவது என்பன போன்ற மிக அடிப்படையான கல்விச் சீர்திருத்தங்களில் அவர் கவனம் செலுத்தியதை இவர்கள் குற்றமாக காண்கின்றனர். ஓர் அச்சுப் பிழையை காரணமாக வைத்துக்கொண்டு நாட்டிற்கு அவசியமான கல்வி மறுசீரமைப்பை தடுக்க இவர்கள் முயற்சிக்கின்றனர்.

இதற்கு எதிர்கட்சிகளை மட்டும் குற்றம் சாட்டி விட முடியாது. பிரதமர் பதவிக்கு கண் வைத்திருக்கும் ஜே.வி.பி. அணியை சேர்ந்த முக்கியமான ஒரு அமைச்சரும் அவருக்கு விசுவாசமான ஒரு குழுவும் பிரதமருக்கு எதிராக குழி பறிக்கும் வேலைகளை, அவருக்கு நெருக்கடிகளைக் கொடுத்து பிரதமர் பதவியிலிருந்து விலக வைக்கும் சதிகளையும் செய்து வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக 6 ஆம் தர ஆங்கில பாடப் புத்தகத்தில் போடப்பட்டுள்ள அந்த "முகவரி" கூட இந்தக் குழுவினால் திட்டமிட்டு போடப்பட்டிருக்க முடியும் என்பதனையும் நிராகரித்து விட முடியாது.

6 ஆம் தர ஆங்கில பாடநூலில் இடம்பெற்ற அந்த "முகவரி" தவறு மன்னிக்க முடியாதது, ஆனால் அதன் மீதான எதிர்க்கட்சிகள், பிக்குகள், அரச எதிர்ப்பு சமூக ஊடகங்களின் எதிர்வினையாற்றல் முற்றிலும் நேர்மையற்றது. எனவே பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணிக்கு எதிரான எதிர்க்கட்சிகள், பிக்குகள், அரச எதிர்ப்பு சமூக ஊடகங்களின் எதிர்ப்புகள், விமர்சனங்கள் அவர் ஒரு பெண் என்ற அடிப்படையில் மிகவும் கீழ்த்தரமாக அமைந்துள்ளதால் மறுபக்கம் ஹரிணிக்கான ஆதரவும் பெருகிவருகின்றது.

அதனால்தான் கல்வி அமைச்சரான ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க முடியாதென எதிர்கட்சிகளை சேர்ந்த தமிழரசுக்கட்சி பகிரங்கமாக அறிவித்துள்ளது. அதேபோன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசிய ஜனநாயகக்கூட்டணி போன்றவையும் ஆதரிக்காது என்றே தெரிகின்றது. அதேவேளை என்னதான் உள்வீட்டுக் கலகங்கள். குழிபறிப்புகள் இருந்தாலும் அரசு என்ற வகையில் ஹரிணிக்கு எதிரான எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஜே.வி.பி. - தேசியமக்கள் சக்தி அரசு இணைந்து தோற்கடிக்கும். எனவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்துள்ளதன் மூலம் பிரதான எதிர்க்கட்சி மீண்டும் ஒரு தடவை மூக்குடைபடப் போகின்றது.

# “ஒரு சிகரெட் – முழு உடலையும் பாதிக்கும்”

**ஆரோக்கிய விழிப்புணர்வு குறிப்பு**

பலர் *ஒரே ஒரு சிகரெட்* தீங்கற்றது என நினைக்கிறார்கள். அது மிகப் பெரிய தவறு. **ஒரு சிகரெட்டே** சில விநாடிகளில் உங்கள் முழு உடலிலும் தீங்கு விளைவிக்கும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

## மூளை

• நிகோட்டின் சில விநாடிகளில் மூளையை அடைந்து **அடிமைத்தன்மையை** உருவாக்குகிறது.
• ஆக்சிஜன் அளவை குறைத்து நினைவாற்றல், கவனத்தை பாதிக்கிறது.
• காலப்போக்கில் **மூளை ரத்தக் கசிவு (Stroke)** அபாயத்தை அதிகரிக்கிறது.

## இதயம் & ரத்த நாளங்கள்

• உடனடியாக **இதயத் துடிப்பு மற்றும் ரத்த அழுத்தத்தை** உயர்த்துகிறது.
• ரத்த நாளங்களை சேதப்படுத்தி அவற்றை இறுக்கமாக்குகிறது.
• இளம் வயதிலேயே **இதய அதிர்ச்சி** அபாயத்தை அதிகரிக்கிறது.

## நுரையீரல்

• காற்றுப் பாதைகளை எரிச்சலூட்டுகிறது; நுரையீரல் திசுக்களை சேதப்படுத்துகிறது.
• நுரையீரல் திறனை குறைத்து ஆக்சிஜன் பரிமாற்றத்தை பாதிக்கிறது.
• நீண்டகாலத்தில் **COPD** மற்றும் நுரையீரல் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது.

## ரத்தம்

• ரத்தத்தை **கட்டியாகவும் ஒட்டக்கூடியதாகவும்** மாற்றுகிறது.
• உடல் உறுப்புகளுக்குச் செல்லும் ஆக்சிஜன் அளவை குறைக்கிறது.
• கைகள், கால்கள் மற்றும் முக்கிய உறுப்புகளின் ரத்த ஓட்டத்தை பாதிக்கிறது.

## வாய் & ஜீரண அமைப்பு

• வாய் துர்நாற்றம், ஈறு நோய், பல் இழப்பு ஏற்படுகிறது.
• **வாய், தொண்டை, வயிறு புற்றுநோய்** அபாயம் அதிகரிக்கிறது.
• ஜீரண சக்தி மற்றும் ஊட்டச்சத்து உறிஞ்சுதலை குறைக்கிறது.

## நோய் எதிர்ப்பு அமைப்பு

• உடலின் **நோய் எதிர்ப்பு சக்தியை** பலவீனப்படுத்துகிறது.
• காயங்கள் ஆறும் வேகத்தை மந்தமாக்குகிறது.
• உடலெங்கும் அழற்சியை அதிகரிக்கிறது.

## ⚠️ உண்மை

**பாதுகாப்பான சிகரெட் எதுவும் இல்லை.**
ஒவ்வொரு இழுப்பும் உடலை சேதப்படுத்துகிறது.
இன்றே புகைப்பழக்கத்தை நிறுத்தினால்—even today—உடல் **சுயமாக குணமடையத் தொடங்கும்**.


## ✅ வாழ்க்கையைத் தேர்வு செய்யுங்கள்.

## ஆரோக்கியத்தைத் தேர்வு செய்யுங்கள்.

**புகைப்பழக்கத்தை நிறுத்துங்கள்.**
உடலைக் காப்பாற்றுங்கள். எதிர்காலத்தைப் பாதுகாப்புங்கள்.
#SmokingEffects #QuitSmoking #HealthAwareness #BodyFacts #HumanBody #Shorts

**எழுத்தாளர்: ஈழத்து நிலவன்**
*மருத்துவமனை மருந்தாளர் | அரச மருத்துவ ஆய்வாளர்*
**13/01/2026**




# கனடாவில் தைப்பொங்கல்




*கடுங்குளிர் கொண்ட கனடா நாட்டில்*
*காலை எட்டரைக்குக் கண்விழித்தே!*
*சுடுநீரில் சாம்பு தேய்த்து நீராடி*
*சூடான கோப்பியைச் சுவைத்தோம்*
*பச்சை மாவிலை பிளாஸ்டிக் தோரணம்*
*பவிசாக வாசலில் கட்டினோம்*
*பசும்பாற் பையை பிறிஜ்ஜில் எடுத்தே!*
*பத்திரமாய்ப் பானையில் விட்டோமே!*

*மின்சார அடுப்பில் மெதுவாய் வைத்தே!*
*மகிழ்வொடு பொங்கலைத் தொடங்கினோம்*
*அன்பொடு அகத்தாளும் நானும் சேர்ந்தே!*
*அருமையாய்ப் பொங்கல் செய்யவெண்ணி*
*வன்னி அரிசியென்று வடிவாய்ப் பொதிசெய்து*
*வரிசையாய் அடுக்கி இருந்ததில்*
*பொன்போல் பெற்று வந்த பச்சரிசியை*
*பயறுடன் பானையில் இட்டோமே!*

*தேங்காய்த் துருவலும் தித்திக்கும் சர்க்கரையும்*
*தேனும் திராட்சை வற்றலும்*
*பாங்காய்ப் பசுநெய் பதமாய் விட்டே!*
*பேரீச்சம் பழமும் சேர்த்தோம்*
*கற்கண்டும் முந்திரியும் கச்சிதமாய்க் கலந்தே!*
*காற்பலம் ஏலமும் இட்டோம்*
*பற்றொடு பொங்கிய சத்தான பொங்கலை*
*பக்குவமாய் இறக்கி வைத்தோமே!*


*பட்டாசு வெடியுமின்றி பக்திப் பாட்டுமின்றி*
*பகலவனின் பார்வை அற்று*
*முட்டான குளோசெற்றில் மூச்சடங்கி நிற்கும்*
*முதல்வனுக்குப் படைத்து வைத்தோம்*
*வட்டமாய்க் கூடியே வணக்கம் செலுத்தி*
*வரிசையாய் இருந்து உண்டோம்*
*இட்டமாய் இயன்றவரை இனத்தவர்க்கும் கொடுத்தே!*
*இனிமையாய்த் திருநாளைக் களித்தோமே!*

*என்ன விலையைக் கொடுத்தே என்றாலும்*
*எம்மின வருங்காலச் சந்ததிக்கு*
*இன்பப் பொங்கல் விழாவின் இனிமையை*
*இளையோர்க்கு சொல்லி வைப்போம்*
*தொன்மைப் பரம்பரை விழுமியம் தொலைந்திடா*
*தன்மையாய்ச் சிறார்க்குச் சொல்லுவோம்*
*உன்னத நாளாம் உழவர் திருநாளை*
*உலகெலாம் அறியச் செய்வோமே!*

***ஆக்கம் ... மார்க்கம் சந்திரன்***



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்துத் திருக்கோயில்கள்

(வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1178

# சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயம்

## குப்பிளான், யாழ்ப்பாணம்

விநாயகப் பெருமான் மந்தரி சொரூபர். சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் ஆகிய இரு பிரணவ மந்திரங்களின்மீது, பார்வதி பரமேசுவரர் தங்களது திருப்பார்வையைச் சாத்த, அம் மந்திரங்கள் யானை உருக்கொண்டு மருவ, அதனின்றும் அவதாரம் செய்தவர் விநாயகப் பெருமான். இவ்வாறான பெருமைமிகுந்த, கற்றிடும் அடியவர் புத்தியில் உறைகின்ற பெருமான், குப்பிளான் கிராமத்திலே சொக்கவளவிலே சோதிவிநாயகராக எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

சைவமும் தமிழும் ஒருங்கே செழித்து வளரும் குப்பிளான் கிராமம், சைவச்சான்றோர் நிறைந்த திருவூராகவும், காசிவாசி செந்திநாதையர் முதல் சைவபூசணம் கா. நல்லையா வரை சைவம் காத்த பலர் வாழ்ந்த அருட்பொலிவு நிறைந்த பூமியாகவும் விங்குகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள விநாயகரை சோதி விநாயகப் பெருமான் என அடைமொழியோடு அழைக்கும் வழக்கத்திற்கு ஒரு சம்பவம் காரணமாகக் காணப்படுகின்றது.

1947 ஆம் ஆண்டின் பின்னர் தமிழீழப் பிரதேசங்கள் யுத்தபூமியாக மாறுவதற்கு முன், திருக்கோணேஸ்வரத்திலே எழுந்தருளியுள்ள கோணேசப்பெருமான் ஈழத்தின் வடபகுதிக்கு எழுந்தருளி, ஊர்வலமாக வரும் வழக்குக் காணப்பட்டுள்ளது. இவ்வாறு கோணேசப்பெருமான் வடபகுதிக்கு ஊர்வலமாக வந்தவேளை, குப்பிளான் கிராமத்தில் சொக்கவளவிலே எழுந்தருளியுள்ள விநாயகர் ஆலயத்திற்கும் எழுந்தருளியுள்ளார். இக்காலப்பகுதியிலிருந்து விநாயகப்பெருமான் சோதி வடிவமாக, ஆலய அர்ச்சகராக விளங்கிய பொன்னையா சுந்தர சர்மாவிற்குத் தென்பட்டமையால், சோதிவிநாயகர் என்ற திருநாமம் ஏற்படலாயிற்கு. இதன்பின்னர் சொக்கவளவு விநாயகரை, சோதி விநாயகப்பெருமான் என அன்புடன் அழைத்துப் போற்றுகின்றனர்.

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்பதற்கமை விநாயகரின் அருளாட்சியினால், மண்ணாலான மடாலயமாக விளங்கிய சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயம், பல்வேறு நிலையிலே காலத்திற்குக் காலம் பல படிமுறை வளர்ச்சியைப் பெற்றது.

இவ்வாலயச் சூழலிலே வாழ்ந்த பொன்னையர் குடும்பத்தினர், சுந்தரசர்மா குடும்பத்தினர் மற்றும் வைத்தியர் சிதம்பரநாத ஐயர் (தடி ஐயர்) குடும்பத்தினரும் இவ்வாலய சுற்றாடலில் வாழ்ந்து சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமானை வணங்கி வரலாயினர்.

குப்பிளான் கிராமத்து மக்கள் சோதிவிநாயகப்பெருமான் அருளாலால் பல்வேறு வளங்களையும் பெற்றவாகளாக விளங்கினர். எனவே சோதிவிநாயகப் பெருமான் உறையும் மடாலயத்தை மாற்றியமைக்க எண்ணங்கொண்டனர். இதன்விளைவாக 1927 ஆம் ஆண்டு 25 பேர்கொண்ட தர்மகர்த்தசபையொன்று சோதிவிநாயகப்பெருமான் ஆலயத்தில் உருவானது. ஆசிரியராக விளங்கிய வைத்தியர் சுப்பையா அவர்கள் இச்சபையின் தர்மகர்த்தாவாகவும், சட்டத்தரணி வைத்திலிங்கம் தம்பிராசா அவர்கள் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுடன் திருவாளர்கள். அம்பலவாணர் சம்பந்தரும், பொன்னையா சுந்தரசர்மாவும் காரியதரிசிகளாக இணைந்து, ஆலயப் பணிகள் சிறப்பாக நிறைவேற உதவினர்.

இச்சபையின் அங்கத்தவர்களாக அன்பும், அறிவும், ஆற்றலும்கொண்டோர் பணியாற்றியுள்ளனர். இறைபணிக்குத் தம்மை அர்ப்பணிப்போர் அன்பிலும், அறத்திலும் சிறந்தவர்களாக வாழவேண்டும். இவ்வாறான பெருமக்களுடைய பணிகளை மீளவும் நோக்குவது, எதிர்காலச் சந்ததியினரும் இவ்வாறானோர் பணிகளை எண்ணிப்பார்க்க உதவும். ஆலயவளர்ச்சியின் ஆரம்பகாலத் தூண்களாக விளங்கிய திருவாளர்கள் வைத்திலிங்கம் தம்பிராசா, வைத்திலிங்கம் கந்தையா, வைத்திலிங்கம் பொன்னம்பலம், குட்டித்தம்பி பொன்னம்பலம், சின்னத்தம்பி பொன்னம்பலம், சங்கரப்பிள்ளை செல்லையா, சங்கரப்பிள்ளை துரையப்பா, கதிர்காமர் தம்பு, அம்பலவாணர் சம்பந்தர், சின்னத்தம்பி இளையதம்பி, சுவாமிநாதர் சுப்பையா, நாகமுத்து தம்பையா, வைத்தியர் நாகலிங்கம், கதிர்காமர் நாகமணி, காசியர் மூத்ததம்பி, பொன்னர் சீனியர், கார்த்திகேசு வல்லிபுரம், தர்மர் பொன்னம்பலம், பொன்னையா சுந்தரசர்மா, வீரவாகு வைத்திலிங்கம், இளையதம்பி தம்பிமுத்து, இராசிங்கர் நாகமணி, வல்லிபுரம் நல்லதம்பி, சண்முகம் சின்னத்தம்பி, அம்மையார் சின்னாச்சிப்பிள்ளை ஆகியோர் ஆரம்பகால தர்மகர்த்தா சபையிலே இடம்பெற்றோராக விளங்குகின்றனர். இவர்களுடைய அரும்பணியினால் 1927 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் ஆலயம், தென்னங்கீற்றினால் அமைந்த கூரையும், கற்சுவரும் கொண்ட மடாலயமாக மாற்றம் பெற்றது.

வளரும்..

---

இலங்கை செய்திகள் Sri Lanka News

# விஷ போதைப் பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்கான யாழ்ப்பாண மாவட்ட செயற்பாட்டுக் குழு ஸ்தாபிதம்!

பு. கஜிந்தன்



"போதை இல்லாத நாடு மகிழ்ச்சியான நாளை" என்பதனை உருவாக்குவதனை தொலைநோக்காக கொண்ட மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாவட்ட செயற்பாட்டுக் குழுவினை ஸ்தாபிப்பதற்கான விசேட கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமாகிய கௌரவ இராமலிங்கம் சந்திரசேகரின் தலைமையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ஆனந்த விஜயபால அவர்களது பங்குபற்றுதலுடன் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றைய தினம் (2026.01.14) ஆந் திகதி புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மதகுருமார்கள், வட மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், கௌரவ கருணநாதன் இளங்குமரன், கௌரவ சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. ரவி செனவிரத்ன, அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் ஆகியோரும் பங்குபற்றினர்கள்.

இக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் வரவேற்புரையாற்றுகையில், விஷ போதைப்பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்கான "முழு நாடும் ஒன்றாக" தேசிய செயற்பாடு நிகழ்ச்சித்திட்டன் கீழ் மாவட்ட செயற்பாட்டுக் குழுக்களை ஸ்தாபித்தல் கூட்டத்திற்கு வருகை தந்த மதத் தலைவர்கள், கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரையும், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவையும் வடக்கு மாகாண ஆளுநரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கௌரவ நாகலிங்கம் வேதநாயகன், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரையும் வரவேற்றதுடன், இத் திட்டத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்றிட்டத்தை முன்னெடுக்க அனைவரும் ஒன்றுகூடி உள்ளதாகவும், முழு நாடுமே ஒன்றான திட்டமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பித்து முன்னெடுக்கப்பட்டு அதன் முதற்கட்ட செயற்றிட்டமாக மாவட்ட செயற்குழு தாபிக்கப்படுவதாகவும், பிரதேச, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்ற வாக்கிற்கு இணங்க சிறுவர்களை இளைய சந்ததியினரையும் ஆரோக்கியமான நல்ல முறையில் வளர்த்தெடுக்க வேண்டிய முக்கியமான தேவை காணப்படுவதாகவும், அதிமேதகு ஜனாதிபதியின் எண்ணக்கருவை செயற்படுத்த மாவட்ட மட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதாகவும், இத் திட்டத்தின்





செயற்பாட்டு அங்குரார்ப்பண நிகழ்வு அதிமேதகு சனாதிபதி தலைமையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்து போதைப்பொருள் பாவனையை ஒழித்து யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருமான கௌரவ இராமலிங்கம் சந்திரசேகர் அவர்கள் தலைமையுரையாற்றுகையில், யாழ்ப்பாண மாவட்டத்தை போதையிலிருந்து பாதுகாப்பதற்கான பாரிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு எனவும், ஊடகங்களும் அதற்கான பங்களிப்பினை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், போதைப் பொருளை எவ்வாறாயினும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில் ஜனாதிபதி மிக உறுதியாக உள்ளதாகவும், இத் திட்டத்தை முன்னெடுப்பதிலுள்ள சவால்களை எதிர்கொண்டுவருவதாகவும், பாடசாலை மாணவர்களிடம் பரவியுள்ள போதைப் பொருளினையும் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், போதைக்கு அடிமையாகும் தன்மை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது எனவும், போதைப் பொருள் வியாபாரிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு செயல்படுகின்றனர் எனவும், அதனை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு செயற்றிட்டங்களை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதியின் பங்களிப்புடன் இந்த போதை ஒழிப்பு திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது எனவும், போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டும் எனவும், இதற்கு அனைத்து அதிகாரிகளதும் பொது மக்களின் பங்களிப்பும் தேவை என்றும், இது தொடர்பான ஏதாவது இடையூறுகள் ஏற்பட்டாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்றும் தெரிவித்து, போதைக்கு எதிரான செயற்பாட்டிற்கு அனைவரின் ஒத்துழைப்பினையும் நல்குமாறு கேட்டுக்கொண்டார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இச் செயற்பாட்டிற்கான ஆலோசனை களையும், கோரிக்கைகளையும் பொதுமக்கள் பாதுகாப்பு கௌரவ அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு முன்வைத்தார்கள்.

இக் கூட்டத்தில் வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடமாகாண கடற்படைத் தளபதி, விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரி, பாதுகாப்பு படைகளின் அதிகாரி, பிரதிப் பிரதம செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு மாகாண சபையின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர்கள்.

# இவ்வார ராசிபலன்

## 16-01-2026 வெள்ளி தொடக்கம் 22-01-2026 வியாழன் வரையும்




**மேஷம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. முயற்சிகள் வெற்றியை தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். அதிகாரம் உயரும். பயணம் அனுகூலம் தரும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் உண்டு. உத்தியோக உயர்வு கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகன செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு கிட்டும். திருப்பங்கள் நிறைந்த காலம். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். உடல்சோர்வு ஏற்படும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பழையக் கடன் தீரும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். பெருமைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராமர், அதிர்ஷ்ட எண்: 8,4,6,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,X




**ரிஷபம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும் உருவாகும் வாரம். பெருமைகள் கூடும். வழக்குகளில் வெற்றி உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. மற்றவர்களால் மேன்மை உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கல்வியில் கவனம் தேவை. குடும்ப குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை தீரும். எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் தரும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். மனம் மகிழும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். முற்போக்குச் சிந்தனை வரும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். சீரான வாழ்வு அமையும். சிந்தனைகள் மேலோங்கும். ஆடம்பர எண்ணங்கள் அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். இனிய தகவல் வந்து சேரும். உறவுகளால் மதிப்பு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,6,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**மிதுனம்:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். உத்தியோக உயர்வு கிட்டும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். முயற்சிகள் பலிதமாகும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். வசந்தம் வீடு தேடி வரும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் கிட்டும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. மனநிம்மதி அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,6,5,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கடகம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. நண்பர்கள் பாராட்டு கிட்டும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பிணிகள் நீங்கும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொது விஷயங்களில் ஆர்வம் கூடும். சிரமங்கள் குறையும். எண்ணங்கள் நிறைவேறும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். முன்னேற்றமான தருணம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் லாபம் கூடும். பெண்களுக்கு கவனம் தேவை.


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 1,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H




**சிம்மம்:** பெத்தவங்க வாழ்த்து கிடைக்கும் வாரம். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். குழப்பங்கள் அகலும். வியாபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பதவி உயர்வு தடைப்படும். வர்த்தக தொழில் லாபம் தரும். மாணவகளுக்கு உற்சாகம் கூடும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபத்தை தவிர்க்கவும். பயணம் பலன் தரும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். புகழும், பொருளும் பெருகும். நன்மைகள் அதிகரிக்கும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் நீங்கும். கல்வியில் கவனம் தேவை. தனம் சேரும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டாகும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். தோற்றப்பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். பணத்தட்டுப்பாடு நீங்கும். ஆக்கம் அதிகரிக்கும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 6,4,8,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,I




**கன்னி:** ஆடம்பர நாட்டம் அதிகரிக்கும் வாரம். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். குடும்ப உறவு பலப்படும். பால் தானம் பாவம் போக்கும். விரயங்கள் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல் வாங்கலில் சுமூகநிலை ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். மன அமைதி கிட்டும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். தடைகள் விலகும். நீண்ட நாளைய நோய் விலகும். புதிய தொழில் முயற்சி கைக்கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபகாரிய நிகழ்ச்சி நடைபெறும். தனலாபம் பெருகும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். சேமிப்பு வளரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல்நலம் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. காரியம் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சப்த கன்னிமார்கள், அதிர்ஷ்ட எண்: 9,5,3,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,F




**துலாம்:** பொன், பொருள் சேரும் வாரம். பதவி உயர்வு கிட்டும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். வாகனத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு அணிகலன் சேரும். மறைமுக எதிர்ப்புக்கள் குறையும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். காலை நேரத்தில் கவனம் தேவை. மனஅமைதி அதிகரிக்கும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். மனமகிழ்ச்சி கிட்டும். பணியாட்கள் ஆதரவுகள் பெருகும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். நல்லோர்கள் வாழ்த்து அதிகரிக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. விருந்தினர்கள் வருகை உண்டு. அர்ச்சனை செய்வதால் பிரச்சனை குறையும். விரக்திகள் மறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். குழந்தைகளால் பெருமை சேரும். பொருளாதார வளம் மேம்படும். எதிரிகள் பலம் குறையும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை ஏற்படும். கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. கடன்சுமை அதிகரிக்கும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். வரவுகள் திருப்தி தரும். விவசாயம் பலன் தரும். கவலைகள் ஒழியும். புதிய நட்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,8,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,Z

(தொடர்ச்சி 22 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(21 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** கணவன், மனைவி கௌரவம் உயரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் தரும். மனக்குழப்பம் நீங்கும். மற்றவர்கள் உதவி கிட்டும். வியாபார லாபம் கூடும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. யோகமான காலம். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். திட்டம் வெற்றி பெறும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சட்டம் சாதகமாகும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பட்டம் பதவி வந்து சேரும். சுபச்செய்திகள் வரும். மாலை நேரத்தில் செய்யும் பிரார்த்தனை மன அமைதியைத் தரும். பெண்களுக்கு யோகம் கூடும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய்வழி உறவில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும். சுபச்செலவு வரும். வினைகள் அகலும். உற்சாகம் களை கட்டும். வேலை பளு அதிகமாகும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். புதுமைகள் நிறைந்த காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F





**தனுசு:** எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும் வாரம். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். ஏற்றுமதி தொழில் லாம் தரும். செயலில் துணிவு கூடும். நீண்டநாள் கனவு நிறைவேறும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். வேண்டாத விஷயங்கள் விலகும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். சுப விரயம் ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். உண்மைகள் வெளிப்படும். பக்கத்து வீட்டு பகை மாறும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் அதிகரிக்கும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். முடிவுகளில் தெளிவு இருக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். மனோதைரியம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வாகன மாற்றம் ஏற்படும். மன அமைதி சீர்குலையும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். குடும்ப வளர்ச்சி கூடும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். நட்டமில்லாத நன்மை உண்டு. திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். கடல் கடந்த பயணம் உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,Q




**மகரம்:** சுபச்செய்தி வரும் வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்தி வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உறவினர்கள் வருகை உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். திருப்தி பெருகும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். மனைவியால் மதிப்பு உயரும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பொறாமைகள் அதிகரிக்கும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். மாற்று இன நட்புப் பெருகும். வயிற்று உபாதைகள் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மைத் தரும். தொழில் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். எதிர்மறை எண்ணம் உருவாகும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. மனதில் குழப்பம் தீரும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் உண்டு. பூர்வீகச் சொத்து சேரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். யோக பலம் கூடும். அலைச்சல் குறையும். குதூகலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரிபுரசுந்தரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,2
அதிர்ஷ்ட நிறம்: பழுப்பு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** செல்வாக்கு பெருகும் வாரம். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி கூடும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். குடும்ப சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும். மனோ பயம் நீங்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். குடும்ப சேமிப்பு உயரும். இனிய தகவல்கள் வந்து சேரும். பழைய நண்பர்கள் சந்திப்புக் கிட்டும். தனவரவு பெருகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைக்கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவார்கள். பகைவர் பணிந்து நிற்பர். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். விருந்தினர் வருகையுண்டு. உத்யோக உயர்வு உண்டு. பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,4,9
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,I




**மீனம்:** பெருமைகள் சேரும் வாரம். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். இயந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்பம் மேன்மை தரும். ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர்கள் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். பழைய கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் உண்டு. உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பதவி உயர்வு கிடைக்கும். தாய்வழி உறவால் நன்மை உண்டு. புகழ்ச்சி அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பிரச்சனைகள் குறையும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். நிதி நிலைமை திருப்தி தரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். தொல்லைகள் ஒழியும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவுகள் அதிகரிக்கும். வழக்கு சாதகமாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். ஆலோசனை பலன் தரும். விவாக முயற்சி வெற்றி தரும். பெண்களின் கௌரவம் உயரும். வேற்று மனிதரால் லாபம் அதிகரிக்கும். வேலை வாய்ப்புக் கூடும். பாதிப்புக்கள் அகலும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். தொழில் மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலசை முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K

# ரொறன்ரொ பல்கலைக் கழக தமிழ் இருக்கை நிறுவ நிதி வழங்கிய தமிழக முதலமைச்சருக்கு சென்னையில் நேரடியாக நன்றி தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன்




கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் 12ம் திகதி திங்கட்கிழமையும் சென்னையில் தமிழ்நாடு அரசு நடத்திய பிரமாண்டமான “அயலகத் தமிழர் விழா” நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் வகையில் கனடாவிலிருந்து எமது பிக்கரிங் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.

மேற்படி இரண்டு நாட்களும் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி மற்றும் அமைச்சர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

அந்த மேடையில் எமது பிக்கரிங் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்கள் ஆற்றிய உரையானது பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாகவும் சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றதுமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல விடங்களை உள்ளடக்கி உரையாற்றிய அவர் எமது ஈழத்தமிழ் மக்கள் மற்றும் தமிழ்க் கனடியர்கள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி உரையாற்றினார். ரொறன்ரொ பல்கலைக் கழகத்தில் “தமிழ் இருக்கை” அமைவதற்கு நிதி உதவி வழங்கிய தமிழக முதலமைச்சருக்கும் அவர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நன்றி தெரிவித்தார். அத்துடன் எமது தாயகத்திலிருந்து அடைக்கலம் தேடிச் சென்ற தமிழ் மக்களை தமிழ்நாட்டில் தங்கவைத்து பராமரித்து அவர்கள் பிள்ளைகள் உயர் கல்வி பெறவும் வழி வகுத்தமைக்காகவும் நன்றி தெரிவித்தார்.






இவ்வாறு சென்னை “அயலகத் தமிழர் விழா” விழாவில் நேரடியாகப் பாராட்டுத் தெரிவித்த எமது பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்களைச் சந்தித்த சில அமைச்சர்களும் அவருக்கு நன்றி தெரிவிததார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்படும் படங்கள் சென்னை “அயலகத் தமிழர் விழா” மண்டபத்தில் எடுக்கப்பெற்றவையாகும்.


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
COMMERCIAL
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
CONSTRUCTION
OUR SERVICE
Purchase
Builder Purchase
MLS Purchase
Private Purchase
Equity line of Credit
Refinance
Renewal
CALL US
NESAN
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
Scotiabank
Canada Trust
First National Financial LP
Manulife
RFA
Desjardins
MCAP
Home Trust
Equitable Bank
radius financial
RMG
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1554 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 16, 2026

## "பொங்கல் பண்டிகையானது தமிழர்களின் பண்பாட்டு விழாவாக மாத்திரமல்ல, அவர்களின் வாழ்வியலின் அடிப்படையாகவும், உழைப்பிற்கும் வலுவூட்டலுக்களுக்கும் உரிய அடையாளமாகவும் திகழ்கின்றது!"

### — அனைத்துலகத் தமிழர் பேரவைத் தலைவரின் பொங்கல் விழாச் செய்தி!



உழைப்பினால் தேசத்தை வலுப்படுத்துவதே தமிழர் திருநாளான பொங்கலின் மையப் பண்பாடாகும். தமிழர்களின் பண்பாடு என்பது வாழ்வியலின் அடிப்படை மட்டுமன்றி, உழைப்பையும் வலுவூட்டலையும் அடையாளப்படுத்தும் ஆதாரமாகவும் திகழ்கிறது என்பதற்கு பொங்கல் பண்டிகை தக்க சான்றாக அமைகிறது.

இவ்வாறு தனது பொங்கல் விழாச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார், அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் கனடா வாழ் திரு நிமால் விநாயகமூர்த்தி.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

## Toronto Mayor, Her Worship Olivia Chow attends 'Thai Pongal' Celebrations at Canada Kanthasamy Hindu Temple.

## கனடா கந்தசுவாமி ஆலய பொங்கல்விழாவில் கலந்து கொண்ட ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா சோ அவர்கள்!



கனடாவில் பொங்கல் தினமான 14-01-2026 புதன்கிழமையன்று கனடா கந்தசுவாமி ஆலய நிர்வாக சபையினர் ஏற்பாடு செய்திருந்த பொங்கல்விழா தொடர்பான விசேட பூசை மற்றும் வழிபாடுகளில் கலந்து கொண்ட ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா சோ அங்கு நிர்வாக சபையின் தலைவர் முத்துராஜலிங்கம் (முத்து) மற்றும் தனபாலசிங்கம் போன்ற முக்கிய உறுப்பினர்களால் வரவேற்கப்பெற்றார்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## "அயலகத் தமிழர் தின நிகழ்வை நடத்தும் முதல்வர் ஸ்டாலின், தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லையை தாண்டாது இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்"

### — வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் வேண்டுகோள்



அயலகத் தமிழர் தினம் என்ற நிகழ்வை நாங்கள் வரவேற்றாலும் வட பகுதி மீனவர்களின் நலனும் அதில் உள்வாங்கப்பட வேண்டும். இன்று வரை தமிழக மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.அதற்கு காரணம் தமிழக முதல்வரை சேரும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என். எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 13ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை (13-01-2026) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

## 30 ஆண்டுகளாக இயங்கிவருகின்ற "கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்திற்கு" தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன்!




கனடாவில் 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்று அமரர் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களை முதலாவது தலைவராகக் கொண்டு இயங்கத் தொடங்கி தற்பொழுது 30 ஆண்டுகளை கடந்து வெற்றிகரமான இயங்கிவருகின்ற "கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்திற்கு" ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் ஒன்றாரியோ அரசின் குடியுரிமை அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமாகிய அரிஸ் பாபிகியன் அவர்கள் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## தைப்பொங்கலன்று கனடா "யுகம்" வானொலி கலைக் கூடத்திற்குச் சென்று அதன் நிர்வாகிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்த ஒன்றாரியோ மாகாண அமைச்சர்!



கனடாவில் மிகப் பெரிய மாகாணமாகத் திகழும் ஒன்றாரியோ மாகாணத்தின் மூத்தோர் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் கௌரவ றேமண்ட் சோ அவர்கள் தைப்பொங்கல் தினமான 14-01-2026 அன்று கனடா "யுகம்" வானொலி கலைக் கூடத்திற்குச் விஜயம் செய்தார்.

அங்கு அதன் நிர்வாகிகளான "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் மற்றும் "நவரச நாயகி" ரூபி யோகதாசன் ஆகியோருக்கு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்து அரசு சார்பான வாழ்த்துப் பத்திரத்தையும் அவர்களிடம் கையளித்தார். அத்துடன் கனடாவில் தமிழ் ஊடகங்கள் ஒன்றாரியோ அரசின் நல்ல திட்டங்களை தமிழ் மக்களுக்கு எடுத்துச் செல்லும் பணியினையும் பாராட்டினார்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Realty Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker